# புதிய உலகம்

பங்குனி, சித்திரை
1983



அனைவர்க்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

'ருதிரோற்பவ' புத்தாண்டில் வாசகநேயர்கள் எண்ணிய எண்ணியாங்கு எய்தி இன்புற்றிருக்க வாழ்த்துகிறோம்.

ஏழாவது ஆண்டு

மலர் 37

பங்குனி — சித்திரை 1983

தொகுப்பு:
கரவையூர்ச் செல்வம்

விநியோகம்
பிரான்சிஸ் டானியல்

வெளியீடு
கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

தொடர்பு
"புதிய உலகம்"
தொடர்பகம்
657, மருத்துவ மனைச் சாலை
யாழ்ப்பாணம்.

"PUTHIYA ULAKAM"
THODARPAHAM
657, Hospital Road,
JAFFNA

தொலைபேசி: 23798

விலை ரூபா 2-50

சந்தா, ஆண்டுக்கு 15/-

சிந்தனையூட்டும் சஞ்சிகை

# புதிய உலகிலே...

| | |
|---|---|
| எமது பார்வை ... | 1 |
| அஞ்சலித் தேன் ... | 4 |
| உயிர்ப்பு வாழ்வு ... | 5 |
| சித்திரை வந்தது தோழா ... | 7 |
| சபாஷ் ஆனந்த் ... | 8 |
| பக்தன் பாரதி ... | 14 |
| இடுக்கணுக்கு ஈடு... ... | 19 |
| பேராசிரியர் கைலாசபதியின் சிந்தனைப் பாதை ... | 21 |
| இளமை போகுமுன் ... | 27 |
| சிந்தனைகள் சிதறுகின்றன ... | 29 |
| தருமத்தை நிலைநாட்டிய திருக்கரம் ... | 32 |
| புதிய உலக வெளியீட்... ... | 33 |
| இலக்கிய ஏடுகள் ... | 35 |
| குறுக்கெழுத்துப் போட்டி ... | 38 |
| சிறுவர் உலகு ... | 40 |
| எண்ணியதை எண்ணி... ... | 42 |
| எந்த நாளோ? ... | 48 |
| புதுமைப் பதில் ... | 49 |
| உங்கள் பார்வை ... | 50 |

படைப்புகளுக்குப் பொறுப்பு படைத்தவர்களே;
கருத்துகளுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே — ஆர்.
(FOR PRIVATE CIRCULATION ONLY)

## புது பார்வை

# சுதந்திரத்தின் காவல் நாய்

நாளேடுகள், சஞ்சிகைகள், வானொலி, திரைப்படங்கள் போன்ற மக்கள் தொடர்பு 'சாதனங்கள்' இன்று மக்களுடைய வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்துவிட்டன. தொலைக்காட்சி இன்னமும் பரவலாக ஈழத்து மக்களுடன் கலக்காத காரணத்தினால் அதை மேலே நான் வேண்டுமென்றே சேர்த்துக் கொள்ளவில்லை.

மேற்கூறிய தொடர்புக் 'கருவிகள்' எவ்வளவுதூரம் மக்களுடைய வாழ்க்கையுடன் கலந்துவிட்டதென்றால், தொடர்பியல் ஆய்வாளர்கள் அவற்றை இன்று கருவிகளாகவே கருதுவதில்லை. அவை ஒவ்வொன்றும் ஒரு தனி மொழியென்ற கருத்தே வலியுறுத்தப் படுகின்றது.

இம் மக்கள் தொடர்பு மொழிகள் மக்களை ஆக்கவும் அழிக்கவும் முடியுமென்பதிற் சந்தேகமில்லை. ஒரு சமூகத்தைச் சிந்திக்கவைத்து, அச்சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தைப் படிப்படியாக உயர்த்த இத் தொடர்புகள் மிகப் பரவலான முறையிலும், ஆழமான முறையிலும் உதவலாம். அதேவேளை அச்சமூகத்தைச் சிந்திக்க வைக்காது இருக்கும் சிந்தனையையும் மழுங்கவைத்து மனிதர்களாக அவர்கள் வளராது மந்தைகளாக வாழ வழிவகுத்துவிடக்கூடிய சக்தியும் இத் தொடர்பு மொழிகளுக்கு உண்டு.

பல இராணுவ ஆட்சிகளிலும் சர்வாதிகார ஆட்சிகளிலும் இவ் வுண்மையை நாம் காணுகின்றோம். அங்கெல்லாம் உண்மைகள் மறைக்கப்பட்டுப் பொய்களையே மீண்டும் மீண்டும்கூறி, மக்களைப் பொய்களையே நம்பவைத்து விடுகின்றார்கள். அடிமேல் அடி அடிக்க அம்மியும் நகருகின்றது. பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்படும் பொழுதும் இதே நிலைதான் உருவாகின்றது.

நல்லெண்ணங் கொண்ட எத்தனையோ சிங்கள மக்கள் தமிழர்களையிட்டுத் தப்பெண்ணங்கொள்ள மூலகாரணமாக இருந்தது — இருப்பது பல சிங்கள ஆங்கில நாளேடுகள், சஞ்சிகைகள், பாடநூல்கள், வானொலி, திரைப்படங்கள் என்பதிற் கிஞ்சித்தும் ஐயமில்லை. இரு இனங்களும் சமாதானமாக வாழவேண்டுமென்று மேடைகளில் அதிகாரத்தோடு முழங்குவோர், இத்துறையில் எந்தக் கவனமும் எடுக்காதது வேண்டுமென்றே செய்வதுபோன்றே தோன்றுகிறது.

நூற்றுக்கணக்கான மக்கள் அடிபட்டு, உதைபட்டு, வெட்டுண்டு இறந்தபின் கும்பகர்ணத் தூக்கத்தில் இருந்து எழுந்துவந்து சமாதானம், ஒற்றுமை என்று அறிக்கைவிடும் கத்தோலிக்க மதபீடம்கூட இத்துறையில் என்ன செய்தது என்று இவ்விடத்தே கேட்காமல் இருக்க முடியவில்லை. தமது அதிகாரத்துக்குள் இயங்கும் சிங்கள, ஆங்கில, வார, மாத ஏடுகள் மூலமும், வானொலி நிகழ்ச்சிகள் மூலமும் இவர்கள் இதுவரை செய்ததென்ன? கிறீஸ்துவின் உயிர்ப்பைக் கொண்டாட விழையும் கிறீஸ்தவ உலகம் உயிர்ப்பின் உண்மையான செய்தியைப் புரிந்துகொண்டு, இனங்களிடையே உள்ள பிரச்சினைகளை நேர்மையுடன் அணுகி, மக்களும் அவற்றைப் புரிந்துகொள்ள ஆவன செய்யவேண்டுமெனக் கேட்கின்றோம். மக்களின் முழுமையான மீட்புக்கும், வளர்ச்சிக்கும் இது வேண்டிய ஒன்று.

செய்திகளை வடிகட்டாமலும், சுயலாபம்கொண்ட பூச்சுக் கொடுக்காமலும், மிகைப்படுத்தாமலும் மக்களுக்குக் கொடுக்க வேண்டியது பத்திரிகையாளரின் (வானொலி உட்பட) தலையாய கடமை. அதேவேளை, எந்தக்காலத்தில் எந்தச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று பத்திரிகை – வானொலியாளர்களுக்குத் தெரியவில்லையென்றால், ஒன்றில் அவர்கள் விஷமத்தனமாக மக்களை ஏமாற்றுகிறார்கள், அன்றேல் இத்துறைக்கு அவர்கள் கிஞ்சித்தும் தகுதியற்றவர்கள்.

நடுவு நிலைமை காக்கும் விமர்சனங்கள் மூலமும், ஆய்வு—அறிவியல் கட்டுரைகள் மூலமும் மக்களின் சிந்தனையை வளர்த்து, நல்ல பொதுமக்கள் அபிப்பிராயங்களை (public opinion) மக்களிடையே உருவாக்கவும், பத்திரிகையாளர்கள் முயலவேண்டும். பத்திரிகையாளர்கள் பொதுவாக, அதுவும் ஒரு வளரும் நாட்டில் ஓரளவு தீர்க்கதரிசிகளாகவே இயங்கவேண்டிய பாரிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு.

நீதிமன்றத்திற்கும், காவல் துறைக்கும், கல்வித் துறைக்கும் ஈடு கொடுத்து இயங்கவேண்டிய கடமையும் பொறுப்பும் பத்திரிகை உலகுக்கு உண்டு என்று கூறினும் மிகைபடக் கூறல் அன்று.

அதனுலேயே சொல்லுகின்றேம்—இம்மக்கள் தொடர்புத் துறைகளில் ஆட்சியாளரோ, அரசியல்வாதியோ கைதொடாமல் இருப்பது அவர்களுக்கும், மக்களுக்கும், நாட்டிற்கும் நல்லது.

தலைவர்களை, பொது அதிகாரிகளை விமர்சனம் செய்யும் உரிமையும் சுதந்திரமும் பத்திரிகையாளர்களுக்கு இருந்தாற்ருன், நாட்டில் நல்ல தலைமை ஏற்படும். நல்ல பொது அதிகாரிகள் உருவாகுவார்கள். நாடும் வளரும்.

பத்திரிகை உலகுதான் மக்களின் — மக்கள் சுதந்திரத்தின் காவல் நாய். என்று இந்தக் காவல்நாய் கொல்லப்படுகின்றதோ, அன்றே மக்களின் அடிமை வாழ்வு — மந்தை வாழ்வு தொடங்கி விடும்.

கரவையூர்ச் செல்வம்

★ ★ ★

இவ்வாண்டு சமூகத் தொடர்பு ஆண்டெனச்
சென்ற இதழில் அறிவித்தோம்.
அதையொட்டி இச்சிறப்புத் தலையங்கத்தைப்
பிரசுரிப்பதில் மகிழ்வடைகின்றோம்.



## அஞ்சலித்தேன்

கற்கண்டு தீம்பால் கரும்புச் சுவைப் பாகு
கனிகள் இளநீர் கன்னிமலர்த் தேனும்
அற்பமிவை என்நாவில் அமுதத்தை வார்க்கவில்லை
அன்பர் 'யேசு'என அதிமதுரந் தேங்கிடுமே

★

காவின் இசைக்குயிலும் காவியமும் தென்றலிளங்
காற்றினிசை யொலியும் யாழின் நரம்புமிழும்
பாவின் இனிமையதும் பைந்தமிழும் நான்வெறுக்கப்
பரமன் திருநாமம் பரவசத்தில் ஆழ்த்திவிடும்

★

கோலமதியழகும் குலுங்கும் மலர்வனமும்
கொஞ்சுங் குழந்தைக் குறுநகையுந் தாரகையும்
நீலவிசும்பின் நிறமாற்றம் பார்த்தாலும்
நெஞ்சங் கவர்ந்தீர்க்கும் நிர்மலனார் பொன்வதனம்

★

கண்ணிற் கருத்திற் கேள்வியினில் வந்தெனது
கனவும் நனவுங் களிப்பருளும் மாமணியே
விண்ணின் திருமகனே வேதவடி வானவனே
வீழ்ந்து பணிந்துன் விரைமலர்த்தாள் அஞ்சலித்தேன்.




# உயிர்ப்பு வாழ்வு

பிரகாசம் —

மரித்தும் எழுந்த சத்தியமாய், மரணம் இன்மையின் தத்துவமாய், இறந்தோரில்நின்று பிறந்த தலைப்பேறாய் யேசுபரன் உயிர்த்தெழுந்த உண்மை உலகறிந்தது.

'உயிர்ப்பு' என்பது புதுவாழ்வு. இப்புதுவாழ்வில் இன்று முதலே நாம் பங்குகொள்ளலாம், பங்குகொள்ள வேண்டும். பங்குகொள்ளும்போது மரணம் பொருளற்றதாகிவிடும். மகிழ்வு உயிர் பெற்றதாகிவிடும்.

திருமுழுக்கின் வழியாகப் புத்துயிரடைந்த நாம் புதுவாழ்வு இன்பத்தைப் பெறுவதற்கு நம் உள்ளத்தில் அன்பை வளர்க்கவேண்டும். அன்பினால் யாவரையும் அரவணைக்கவேண்டும். இந்த அன்பு செயலிற் பரிணமிக்க வேண்டும். சிறப்பாக, ஏழை எளியவர்கள், ஒதுக்கப்பட்டோர், நோயாளர், கவலைப்படுவோர், அநீதிக்குள்ளானோர் அனைவரையும் நம் அன்பிற்குரியவர்களென நேசித்து ஆதரவளித்தல் வேண்டும்; ஆறுதல் கொடுக்கவேண்டும். அவர்கள் துயரில் நாம் அனுதாபங்காட்டல் வேண்டும்.

இன்னா செய்தார்க்கும் இனியனசெய்து, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளுடன் அன்பைப் பகிர்ந்து வாழ்ந்து, அன்பினால் உலகை ஒன்றுபடுத்த அயராதுழைக்க வேண்டும். அன்றுதான் கிறிஸ்துவின் உயிர்ப்பில் புதுவாழ்வு நம்வாழ்வாகப் பூக்கும்.

அன்பு தங்கிநிற்கும் இடமே வாழ்வு — அன்பற்றவாழ்வு மரணம். இந்த அன்பின் மகத்துவத்தை, இயேசுவின் உயிர்ப்பு, வழியாகத் தாம் கண்டுணர்ந்த உண்மையை இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புலவன் பாரதி எடுத்துப்பாடியுள்ளார்.

காக்கைச் சிறகினிலே கண்ணன் கரியநிறத்தைக் கண்டும், பார்க்குமிடமெல்லாம் மரங்களின் பசுமையையுணர்ந்தும், கேட்கும் ஒலியிலெல்லாம் தெய்வீக கீதத்தைக் கேட்டும், தீக்குள் விரலை வைத்தபோதும் அவனைத் தீண்டுமின்பத்தையே அனுபவித்தும் இறை வழிபாடு செய்தவர் பாரதி. அவர் இதயம் இவ்வாறு பாடுகிறது,

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்துயிர்த்தனன் நாளொரு மூன்றில்
நேசமா மரியா மக்த லேஞ
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்
தேசத்தீர் இதன் உட்பொருள் கேளீர்
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாசமின்றி நமைநித்தங் காப்பார்
நம்மகந்தையை நாம்கொன்று விட்டால்

சிலுவையில் மரித்த தேவன் மூன்றும்நாள் உயிர்த்த செய்தியை மரியமதலேனாள் நேரிலே கண்டதை உணர்த்தும் முகமாக 'அன்பின் பரிசு' அன்புள்ளங்கொண்ட மதலேனாளுக்குக் கிடைத்த மகிமையைப் புலப்படுத்துகிறார்.

மேலும், அன்பை நம் உள்ளத்திலிருந்து அகற்றிவிடும் அகந்தையைக் கொன்றழித்துவிட்டால் அன்பின் வடிவான தேவன் நம்மிடம் வந்து குடிகொள்வார். வானமேனியோடு காட்சிதந்து நம்மை என்றும் காப்பார் என்றும் அறிவுறுத்துகின்றார்.
இன்னும்,

உண்மையென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித்தவங் கொண்டடித்தால்
வண்மைப் பேருயிர் யேசுக் கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மை காண் மரிய மக்த லேஞ
பேணும் நல்லறம் யேசுக்கிறிஸ்து
நுண்மை கண்ட பொருளிது கண்டீர்
நொடியில் இஃது பயின்றிடலாகும். என்கிறார்.

தன் தூய பாவஉணர்ச்சிகளை மேற்கொண்டு உண்மையென்ற சிலுவையிலே இறைவனோடு தன்னைப் பிணித்து, தவத்தைக் கைக்கொண்டு தன் பெண்மையை ஒளிபெறச் செய்தாள் மரியமதலேனாள், என்ற தத்துவத்தையும் உணர்த்துகிறார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பொருள், உண்மையும், தவமும் என்ற தத்துவத்தை நாமும் உணர்ந்து அன்பில் நிலைத்து அறவழியில் வாழ்ந்தால் உயிர்ப்படையலாம், பேரின்பப் பரகதியில் நீடுவாழலாம்.

---

# சித்திரை வந்தது தோழா !

இத்தரை செழித்திட
இனியவை சொழித்திட
சித்திரை வந்தது தோழா ! — நீ
நித்திரை விட்டெழு தோழா.

பத்தரை மாற்றுப்
பொற்றமிழ் பாடிச்
சித்திரை வந்தது தோழா ! — நீ
நித்திரை விட்டெழு தோழா.

நித்திரையாலே எத்தர்களெம்மை
இத்தனை காலம் ஏய்த்து இழித்து
முத்திரை வைத்தனர் தோழா ! — அடிமை
முத்திரை வைத்தனர் தோழா.

முத்திரை பதித்து
மூடர்கள் மிதிக்க
செத்தவராமோ நாமும் ! — தாய்
பெற்றதும் இதுக்கா கூறும்.

சித்திரைப் பெண்ணின்
செங்கர மிருப்பது
சுதந்திர தீபம் தோழா ! — அதன்
சுடரொளி காணநீ வாடா.

கெட்ட கனவெனத்
துட்டர் துயரினை
விட்டு விழித்தெழு தோழா ! — புது
வீறு கொண்டெழுநீ தோழா !

" நிலாதமிழின்தாசன் "
நிலாவெளி — 3.

சிறு கதை :

# சபாஷ் ஆனந்த்

அன்று மதிய உணவை முடித்த பின்னர் சிறிது நேரம் உறங்கலாம் என்ற எண்ணத்தோடு கட்டிலிற் போய்ச்சாய்ந்தேன். டெலிபோன் மணி டிரிங் ...... டிரிங் ... என்ற ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தது. என் கண் இமைகள் திறக்கவே மறுத்தன. ஒருவித நித்திரை மயக்கத்துடன் எழுந்து 'போனைக்' கையிலெடுத்தேன்.

" ஹலோ " ...... என்றேன். ஓ! அது அவளின் குரல்தான். இத்தனை வருடங்களின் பின்னர் கூட என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

" அப்போ நீ திரும்பிவிட்டாயா ?" அவள் கேட்டாள்.

" ஆமாம் ; என் பெற்றோரைப் பார்ப்பதற்காக வந்தேன் " என்றேன். இருவருக்குமிடையே சிறிதுநேரம் மௌனம் நிலவியது.

" ஆனந்த் !... நீ என்னைச் சந்திக்க வரமாட்டாயா "? அவள் கேட்டாள். உனக்குத்தான் வெற்றிஎன்று உன் தலைக்குள் வைத்துக்கொண்டாயா "?

நான் சிரித்தேன். என்னில் எனக்கே பரம திருப்திதானே ! ஏன், வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும். தன்னைத்தானே பெருமைப் படுத்திக்கொண்டு இடாம்பீக வாழ்க்கை நடத்தும் ஒரு பெரிய தொழில் அதிபரின் ஒரே செல்வப் புதல்விக்குத் தூண்டில் போட்டு இழுக்கப்பட இருந்த மருமகன் அல்ல இப்பொழுது நான்.

அன்று நான் என் சுய கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக, அவர் எனக்கு அளிக்க இருந்த கொழுத்த சீதனத்தை மனத்திடனுடன் உதறித்தள்ளி, அந்தக் கலியாணத்திற்கு ஒப்புக்கொள்ள மறுத்தது இன்றும் என் நெஞ்சத்தில் புகைந்து கொண்டிருந்தது.

அந்த நாள் என் ஞாபகத்திற்கு வருகிறது. அன்றுதான் அவளைப் பெண் பார்க்கப் போய் இருந்தேன். அவள்பெயர் சுகந்தி. சுகந்தியும் நானும் ஒரே கல்லூரியில்தான் படித்தோம். இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினோம்.

அவள் அழகான சேலைகட்டி அடக்கமாக, தமிழ்ப் பெண்களுக்கே உரித்தான பாணியில் அமர்ந்திருந்தாள். அவர்களின் மாடி வீடு பார்ப்பதற்கே மிகவும் கவர்ச்சியாய் இருந்தது. அவ் வீட்டை அலங்கரித்துள்ள தளபாடங்கள், மின் விளக்குகள் இருக்கை அறையில் விரிக்கப்பட்

டுள்ள கம்பளங்கள் யாவும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தன. வேலைக்காரன் ஒருவன் எமக்குத் தேநீர், சிற்றுண்டி வகைகள் பரிமாறினன். நான் சிற்றுண்டிகளை எடுத்துக் கடித்தவண்ணம் என் மாமனாரின் கழுகுக் கண்களை நோட்டம் விட்டேன். அவர் தனது வியாபாரத் திறன்பற்றிப் புகழ்ந்தவண்ணமிருந்தார். அவரது தற்புகழ்ச்சிகளைக் கேட்டு விந்தையான மனிதன் என எண்ணிக் கொண்டேன்.

சிறிது நேரத்தின் பின்னர் எங்களுக்குத் தங்களது அழகான பூந்தோட்டத்தைச் சுற்றிக் காண்பித்தாள் சுகந்தி. அவளது தந்தையார் மேல் மாடியிலிருந்தவண்ணம் எங்களைக் கண்ணேட்டமிட்டார்.

அவள் மிகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் இருந்தாள். அவள் என்னைப் பார்த்தவிதம், தங்களது அழகிய வீட்டாலும், அதன் உள்ளே இருக்கும் தளபாடங்களினலும் நான் கவரப்பட்டுவிட்டேன் என்பதுபோல் இருந்தது. ஆனல், அதற்கு எதிர் மாருகத்தான் இருந்தது என் மனநிலை.

"உன் அப்பா ஒரு பலவீனனைக் கொடுமைப் படுத்துகின்றவர் போலிருக்கிறர்" என்றேன். அவள் அதிர்ச்சியுடன் என்னைப் பார்த்தாள். வேறு யாருமே அவளிடம் அப்படியொரு கருத்தைக் கூறியிருக்க மாட்டார்கள். "தன் பணத்தால் என்னைவிலை கொடுத்து வாங்கப்போகிறர் போலிருக்கிறது" என்றேன் நானும் சற்றுச் சூடாகவே. "உனக்கு அவருடைய அபிப்பிராயம் சரியெனப் பட்டால், வேறு யாரையாவது திருமணம் செய்து கொள்ளலாம்" என்றேன். அவருடைய காற்செருப்புப் போன்ற அடிமை என்று என்னை நினைக்காதே" என்றேன்.

"நீ என்னை என்ன செய்யச் சொல்கிருய் ஆனந்த்"? மிகவும் பரிதாபமான குரலில் கேட்டாள். இரு பூதங்களுக்கிடையே நின்று தத்தளிப்பதுபோல் இருந்தது அவளது பரிதாப நிலை.

"நீயே தீர்மானித்துக்கொள்" நான் ஆறுதலாகவே கூறினேன். "நீ என்னை மணந்துகொண்டு வெளிநாட்டுக்கு வருகின்ருயா? அங்கு நான் எனது மேற் படிப்பைத் தொடரப் போகிறேன். அல்லது உன் அப்பாவின் செல்லமாக இங்கு இருந்து, அவர் விரும்பியவனை மணம்செய்யப் போகின்ருயா?"

"ப்ளீஸ் ...... ஆனந்த்! நீ என் நிலைமையை இன்னும் புரியாமலிருக்கிருய்" என்ருள்.

"ஆம், இல்லை; எனக்கு இரண்டில் ஒன்று தெளிவாகச் சொல்" என்றேன். அவள் கண்களிலிருந்து கண்ணீர் ஆருகப் பெருகியது. என்னை மறுதலிக்கவும் அவளால் முடியவில்லை.

அதேநேரம் தன் தந்தையின் சொல்லையும் மீற முடியவில்லை. நான் திரும்பி வந்தவழியே சென்றேன். அவள் என்னைத் திரும்ப அழைப்பாள் என எண்ணினேன். ஆனால் தன் கைக் குட்டைக்குள் முகத்தைப் புதைத்து அழுதவண்ணமிருந்தாள்.

அவளது தந்தையார் எனது 'என்ஜினியரிங்' தொழிலைவிட்டு தனது தொழில் நிறுவனத்தைக் கவனிக்கும்படி கூறினார். இதை நான் ஏற்பதாய் இல்லை. இருவரும் ஓர் உடன்பாட்டுக்கு வராததால் சில நாள்களால் நான் உபகாரச் சம்பளம் பெற்று மேற்படிப்பைத் தொடர்வதற்காக வெளிநாடு சென்றுவிட்டேன்.

எனது முடிவு சுகந்தியை மிகவும் தாக்கியிருக்க வேண்டும். நான் வெளிநாடு சென்றபின்னரும் என்னைத் திருப்பி வரும்படி பல கடிதங்கள் எழுதுவாள். நான் ஒரேயொரு 'பிக்ஷர் போஸ்ட் காட்' மட்டுமே அனுப்பியிருந்தேன். அதில் நான் அவளை மறக்கவில்லை என்பதையும் குறிப்பிட்டிருந்தேன்.

அவள் எனக்காகக் காத்திருப்பாள் என்று நம்பிக்கை வைத்திருந்தேன், இப்போ மூன்று வருடங்களின் பின்னர் அவளது குரலை மீண்டும் 'போனில்' கேட்கிறேன்.

நான் அன்று சாயந்திரம் அவளை வந்து சந்திப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டு 'போனை'க் கீழே வைக்கும்பொழுது என் தாயார் வந்தார்.

"யார் அது"? என் அம்மாவின் கேள்வி.

"சுகந்தி" என்றேன்.

"நீ அவளைப் போய்ப் பார்க்காமல் இருப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன்" என்றார்.

"ஏன் போகக்கூடாது! நான் வருவதாக வாக்குக் கொடுத்துவிட்டேனே" என்றேன்.

"அவள் இப்போ திருமணம் செய்துவிட்டாள்" என்றார்.

நான் வெளிநாடு சென்று மூன்று வருடங்களுள் நான் அனுப்பிய பணத்தில், எங்கள் வீடும் திருத்தங்கள் பலசெய்து, அகற்கான வீட்டுத் தளபாடங்கள் போட்டுப் பார்ப்பதற்குக் கவர்ச்சியாயிருந்தது. அதற்குக்கூட என் அம்மா நன்றி தெரிவிப்பதாய் இல்லை. நான் அந்தக் கலியாணத்திற்கு மறுத்ததுபற்றி அம்மாவுக்கு என்மீது இன்னமும் கோபம் தணிந்தபாடில்லை காரணம் இவ்வளவு கொழுத்த சீதனத்தை உதறிவிட்டேனே என்றகவலைதான். என் தாயார் உலக வழக்கப்படி பெருத்த சீதனத்தையே எதிர்பார்த்தார். என் தாயாருக்கு எவ்வளவோ விளக்கம் கூறினேன். ஆனால், அவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் இருந்தன. அதனால்தான் அப்போது என் தாயாரின் பிதற்றல் தாங்காது அப்பா என்னை உடனே அமெரிக்கா அனுப்பி வைத்தார்.

அன்று சாயந்திரம் என் தாயார் எவ்வளவோ தடுத்தும்; சுகந்தியைப் பார்க்கச் சென்றுவிட்டேன். நேரமும் இருட்டிவிட்டது. சுகந்தி யாரை மணந்திருப்பாள் என்று அறியும் ஆவல் ஒருபுறம்.

''ஹலோ...'' என்று அழைத்துவிட்டு, என்னை ஊடுருவிப் பார்த்தாள்.

நானும் பதிலுக்கு ''ஹலோ சுகந்தி'' என்று அழைத்துவிட்டு குசலம் விசாரித்தேன்.

அவள் சொன்ன ஆசனத்தில் அமர்ந்தேன். அவள் தன் அறையைக் காண்பித்தபடியே, ''பார்த்தாயா ஆனந்த்! காலம் என்னை எப்படியெல்லாம் ஆக்கிவிட்டது.''

---

பிரான்சிஸ்கா பெனடிக்ற்

12/3, 2-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

---

நான் அறையைக் கண்ணோட்டம் விட்டேன். அந்த அறை வெறுமனேயாகியிருந்தது. அந்த அறையிலிருந்த இடாம்பீகமான தளபாடங்கள் எங்கே? ஆடம்பரமான மின் விளக்குகள் எங்கே? பித்தளையாற் செய்யப்பட்ட யானைக்குட்டிகள் எங்கே! சொகுசான கம்பளங்கள் எங்கே! மற்றும் அலங்காரப் பொருள்கள் எங்கே! ஓரிரு நாற்காலிகள் மட்டுமே போடப்பட்டிருந்தன. கதவுகள், யன்னல்கள் யாவும் துணிகளின்றி வெறுமனே கிடந்தன. நான் அவளைப் பார்த்தேன் கேட்பதற்காக.

''எல்லாமே போய்விட்டது'' என்றாள் மென்மையான தீனக் குரலோடு. எல்லாம் விற்றாகிவிட்டது என்றாள்.

''உன் கணவர் எங்கே?'' என்றேன்.

''அவர் இப்பொழுது என்னுடன் இல்லை. நான் அவரை விவாகரத்துச் செய்வதற்கான நோட்டீஸ் கொடுத்து விட்டேன்.''

நான் பேசாது இருந்தேன்.

''ஏன் உனக்கு இதெல்லாம் ஆச்சரியமாயிருக்கின்றதா?'' என்றாள். பின்னர் மெதுவாகப் பேசத் தொடங்கினாள்.

தங்களது வீடு ஈட்டில் இருப்பதாகவும், இப்போது தான் ஒரு பத்திரிகை உதவி ஆசிரியையாக வேலை செய்வதாகவும் கூறினாள்.

''ஆனந்த்! நீ என்னைத் திரும்பவும் ஏற்றுக்கொள்வாயா? நான் இப்போ உனக்காக எதுவும் செய்யத் தயாராயிருக்கிறேன்.''

''இப்போ உனக்கு என்ன வந்தது? நீதானே உன் அப்பா தெரிவுசெய்த மாப்பிள்ளையைத் திருமணம் செய்யப்போவதாக அன்று தீர்மானித்தாய்.''

''ஆமாம்! அன்று நான் சிறுபிள்ளைத் தனத்தால் பெரிய தவறு செய்துவிட்டேன். நான் உன்னை

யே மணஞ்செய்து இந்தத் தூர் அதிர்ஷ்டமுள்ள வீட்டைவிட்டு உன்னோடு வந்திருக்க வேண்டிய வள்.''

'' உன் அப்பா ......!''

''அவரைப்பற்றிக் கேட்காதே! அவர் தனது சொந்த நலனுக்காக என்னை ஓர் ஆயுதமாகப் பாவித்தார். இப்போ அதற்காக உத்தரிக்கின்றார்.''

'' எனக்கு ஒன்றுமே புரியவில்லையே ......!''

'' சொல்கிறேன் கேள் ஆனந்த்! உனக்கு இங்கு நடந்தது ஒன்றுமே தெரியாது. நீ போனபின்னர் அப்பா என்னை சங்கர் என்பவனுக்கு வற்புறுத்தித் திருமணம் செய்து வைத்தார். அவன் ஒரு நயவஞ்சகன். என் அப்பாவின் தொழிலை நிர்வகிப்பதாகச் சொல்லி ஏமாற்றிப் பணத்தை மோசடி செய்ததுமல்லாது, அப்பா மேற் பழியைச்சுமத்தி அப்பாவை ஜெயிலிலும் தள்ளிவிட்டான். இப்போ அவர் விடுவிக்கப் பட்டுள்ளார்.''

' உன் அப்பா இப்பொழுது எங்கே ......?'' என்றேன்.

'' செய்த பாவத்திற்குத் தண்டனையாக ஒரு 'நர்சிங் ஹோமில்' இருக்கிறார். தனக்கு இவ்வளவு துரோகம் செய்தானே சங்கர் என்ற அதிர்ச்சியிலிருந்து இன்னும் விடுபடவில்லை. நான் உழைத்து என்னையே காப்பாற்றுகிறேன்'' என்றாள்.

'' உனக்குப் பிள்ளைகள் இல்லையா ?'' என்றேன்.

'' ஒரு மகன் மட்டுமே. போர்டிங்கில் விட்டிருக்கிறேன்'' என்றாள்.

'' நான் உன்னுடன் இப்பவும் வரத் தயார்'' என்றாள்.

அவளைச் சந்தித்த பின்னர் நான் தீவிர ஆலோசனையுடன் வீடு வந்து சேர்ந்தேன். தந்தையார் நான் எங்கு போய் வந்தேனெனக் கேட்டார். ஆனால், தாயாரின் மௌனத்திலிருந்தும், வெறுப்பிலிருந்தும் நான் போனஇடம் புரிந்துவிட்டது என்று அறிந்து கொண்டேன்.

நான் எனது இரவுச் சாப்பாட்டை மௌனமாக முடித்துவிட்டு எனது படுக்கையறையில் தஞ்சம் புகுந்தேன். சில புத்தகங்களைப் புரட்டியவண்ணமிருந்தேன். அம்மா என் அறைக்கு வந்தார்.

அன்று எனக்குப் பலர் கலியாணங்கள் பேசி வந்தார்களாம்; அதுவும் பெருவாரியான சீதனங்களுடன். ஏனென்றால் நான் இப்பொழுது 'பொறின் மாப்பிள்ளையல்லவா ?... அம்மா வந்தவர்களை எல்லாம் உபசரித்து எனது பெருமைகளையெல்லாம் புகழ்ந்தாராம். பின்னர் என்னை அறையில் வந்து பார்த்தபொழுது அங்கு நான் இருக்கவில்லையாம்.

''அம்மா! தயவுசெய்து என்னைத் தனிமையில் இருக்க விடுங்கள். நீங்கள் கொண்டுவரும் பெண்களையெல்லாம் அணிவகுத்துப் பார்க்க நான் தயாராய் இல்லை'' என்றேன்.

"நீ அவளைப் பார்க்கப் போயிருந்தாய் என்ன?" என்று அதிகாரத் தொனியில் கேட்டார்.

"யாரை ..."?

"சுகந்தியைத்தான்."

"ஆமாம்!" என்றேன். "அதில் என்ன தவறு?" என்று கேட்டேன்.

"நீ இன்னும் திருமணம் செய்யாதவன். அவளோடு தொடர்பு வைப்பதை நான் விரும்பவில்லை" என்றார்.

"ஏன், அவள் விவாகரத்துச் செய்தவள் என்றுதானே வெறுக்கிறீர்கள்" என்று நான் வாதாடினேன்.

"அது மட்டுமல்ல, அவளுடைய அப்பா வேறுவிதமான காசு மோசடியில் ஈடுபட்டுச் சிறைக்குப் போயிருந்தவர். நல்லவேளை, நீ அவளை முடிக்காததற்கு நன்றி சொல்லவேண்டும்" என்றார்.

"நீங்கள் இப்பொழுது இப்படிப் பேசுகிறீர்கள்! அப்பொழுது கவலைப்பட்டீர்களே, நல்ல ஒரு சீதனமுள்ள இடத்தை விட்டு விட்டேனென்று."

அம்மா மௌனமாக இருந்தார்.

"நீங்கள் இப்போ என்னை என்ன செய்யச் சொல்லப் போகிறீர்கள் என்பதும் எனக்கு நன்றாய்த் தெரியும். எனக்குப் பேசி வரும் ஏராளமான பெண்களில் ஒருத்தியை முடித்து, அதனால் பெருந் தொகையான சீதனத்தைப் பெற்று, என்னை வெட்கங் கெட வைக்கச் சொல்கிறீர்கள் அப்படித்தானே" என்றேன்.

"அதில் என்ன தவறு இருக்கிறது? நீ ஏன் அதற்கு எதிராக நிற்கிறாய் என்பதுதான் எனக்குப் புரியவில்லை" என்றார் அம்மா.

"நான் சுயமரியாதை உள்ள மனிதன் அம்மா, இது ஒன்றும் ஆடு மாடுகள் விற்கும் சந்தையல்ல; அந்தப் பெண்களுக்கும் உணர்ச்சிகள், உரிமைகள் இருக்கலாம். இவற்றை மீறி நான் போகமாட்டேன்" என்றேன்.

ஒரு வாரத்தின் பின்னர் நான் சுகந்தியைத் திருமணம் செய்யப் போவதாகச் சொன்னேன். நான் அவளை ஒவ்வொருநாளும் சந்திக்கப் போனதாகவும் சொன்னேன். அப்பா அதிர்ச்சியால் கல்லாய்ச் சமைந்துபோனார். அம்மாவின் பார்வையோ கடூரமாயிருந்தது. அவர்களது கோரிக்கையை நான் இரண்டாவது தடவையாக நிராகரித்து விட்டேன். முதல் தடவை அவர்கள், 'மணந்துகொள்' என்று சொன்னபோது, தட்டிக் கழித்தேன். இப்போ 'மணக்க வேண்டாம்' என்று சொல்லும்போது மணக்கப்போகிறேன். அவள் என்னைத் திரும்ப வரும்படி எழுதிய கடிதங்கள் என் இதயத்தில் ஆழப் பதிந்து வீணையின் நரம்பைப் போன்று, என்னை அவளுடன் இணைத்தது என்றே சொல்லவேண்டும்.

# பக்தன் பாரதி

ஆஞ்சலோ பொன்னையா,
யே. ச.
இலோயலாக் கல்லூரி.
சென்னை 34,
தமிழ்நாடு... இந்தியா.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், வாழவும் வேண்டும். இது மனித முயற்சிக்கு அடங்கியதே என்பதை நம் முன்னோர்கள் மறந்தார்கள். வறுமையும் வாட்டமும், ஏழ்மையும் ஏளனமும், இழிவும் பழியும் தவிர்க்க முடியாதன என்று எண்ணத் தலைப்பட்டார்கள். அதன் விளைவு அடிமைத் தனமும் அலட்சிய மனப்போக்கும் தமிழகத்திலே தாண்டவமாடத் தொடங்கின.

இந்நேரத்தில் எங்கோ ஒரு மூலையில் இருந்து ஒலித்த குரல் இடியென முழங்கியது. மின்னலெனப் பளிச்சிட்டு ஒளி வீசியது. அந்தக் குரல் யாருடையது? நாம் தேசியக் கவி என்றும், புரட்சிக் கவிஎன்றும் புதுமைக் கவியென்றும் பெருமையுடன் கூறிக்கொள்ளும் பக்திக்கவி பாரதி குரல்தான் அது.

முன்னே பலர் தமது புலமையைக் கெட்டிக்காரத் தனத்தைக் காட்டப் பாடினதுண்டு. பொருள் இதுவோ அதுவோ என்று குழம்பும்படி பாடின பாவலர்கள் பலர். பாரதியார் அந்த மரபில் இருந்து விலகினார். உணர்வுகளை உரிய உயிர்த் துடிப்போடு வெளிப்படுத்துவதைத் தம் குறிக்கோளாகக் கொண்டார். தமிழில் அருமையாகப் பாடினார். அதுமட்டுமா சாதாரணத் தமிழனுக்கும் புரியும் தமிழில் பாடினார். அவை கேட்போரைச் சுண்டியிழுத்தன. படித்தோரைச் சிந்திக்க வைத்தன. தூங்கிக் கொண்டிருந்தோரைத் தட்டி யெழுப்பின.

பாரதியை ஒரு புரட்சிக் கவிஞன் என்று ஏற்றுக்கொள்ள முடிகிறது. ஆனால் அதேபாரதி ஒரு பக்தன், ஒரு ஆழ்வார், ஒரு தொண்டர்என்று ஏற்றுக்கொள்ள முடிகிறதா? ஒரு பக்தனுகக் காதலால் கசிந்து, கண்ணீர் மல்கக் கண்ணனை, அவன் உருவில் பரம்பொருளைப் பாடிப் பரவசம் எய்துவதை நோக்கும்போது பாரதி பரம்பொருள்மீது கொண்டுள்ள அன்பு, பக்தி, காதல் வெளிப்படுகிறது.

பாரதி என்றதும் நமது மனக் கண்முன் வருவது சுதந்திர தாகம் வேண்டி, விடுதலைவிரும்பி, பெண்ணின் பெருமை கூற அவன் பாடியிருக்கும் கவிதைகளும், எழுதியிருக்கும் கட்டுரைகளுமாகும். தேசபக்தியில் நம் சிந்தனையைச் செலவிடும் நாம் தெய்வபக்தி

பற்றி அவன் பாடியிருப்பதை அவ்வளவாகச் சிந்திப்பதில்லை. தேசபக்திக்குத் தெய்வீக பக்தி தேவையற்றது என்று அறிவினர்களாய் ஆர்ப்பரிக்கின்ற அரசியல் தலைவர்கள் சிலருக்கும், விஞ்ஞானத்தால் எஞ்ஞானத்தையும் சாதித்துவிடலாம் என்று வீறுப்புப் பேசுகின்ற வீணர்கள் பலருக்கும் விடையாக அமைகிறது அமரகவியின் பாடல்கள்.

தேசபத்தியைத் தெய்வீக பக்தியாக மாற்றிக் கொண்டவர் பாரதியார். வெறும் தேச பக்தியாக மாத்திரம் நமது உணர்ச்சிகள் இருந்துவிட்டால் அவை ஆழமும் வேகமும் பெற்றிருக்கா என்பது அவரின் வாதம்.

பாரத தேசத்தைத் தாயாகவும், நாட்டுப்பற்றைத் தாயன்பாகவும் தேசபற்றைப் பக்தி வைராக்கியமாகவும் கொண்டவர் பாரதி. "அறிவே தெய்வம்" என்பது பாரதியின் தெய்வக் கொள்கைக்கு அடிப்படை, கடவுளை அறிவின் விளக்கமாகக் கொண்ட சான்றோர்களில் பாரதியும் ஒருவர்.

உய்வதனைத்திலு மொன்றாய் — எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்.

"உண்மையே தெய்வம்" என்று கூறும் பாரதி எல்லாச் சமயங்களும் மெய்ப்பொருளையே தெய்வமாக உருவகப்படுத்தி வழிபடுகின்றன என்று கருதுகிறார். கடவுள் வழிபாடு என்பது மெய்யுணரும் முயற்சி, இந்த உண்மையைப் பல சமயக் கோட்பாடுகளிலிருந்தும் அவர் எடுத்துக் காட்டுகிறார்.

உண்மை என்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித்தவங் கொண்டடித்தால்
வண்மைப் பேருயர் யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்

என்பது விவிலியத்திற்குக் கூறும் விளக்கம்.

"நான் அல்லாவை நேரே பார்த்திருக்கிறேன், அவர் எல்லாவற்றையும் படைத்து, எல்லாவற்றையும் இயக்கிக் காத்து, எல்லாவற்றையும் வடிவு மாற்றிக் கொண்டிருக்கிறார் அறிவு வடிவமாக நிற்பவர் அவர். அருள் வடிவமாக நிற்பவர் அவர். அவரை மனமாகிய கோவிலிலே நிறுத்தி பக்தி என்கின்ற பூக்களால் அர்ச்சிப்பதே சரியான பூசை. இடைவிடாமல் அவரிடம் மாறுத பக்தி கொள்ளுங்கள் அவ்விதமான பக்தி இஸ்லாம் எனப்படும்."

## முழுமுதற் பொருள் ஒன்றே

மனிதன் பெறவிரும்பும் முழு நிலைக்கு ஒரு வடிவமே கடவுள். அவரவர் கற்பனைக்கு ஏற்றவகையில் பற்பல பெயர்களால் கடவுள்

என்னும் முழுமையை எண்ணிய எண்ணங்களின் விளைவே, பற்பல சமயங்களின் தோற்றத்திற்குக் காரணமாகும். எனவே எல்லாச் சமயங்களும் கடவுள் என்று வழிபடுகின்ற முழுமுதற் பொருள் ஒன்றே. இக்கருத்தை

" பூமியிலே கண்டமைந்து
மதங்கள் கோடி
புத்த மதம், சமணமதம்,
பார்ஸி மார்க்கம்
சாமியென யேசுபதம் போற்
றும் மார்க்கம்
சநாதனமாம் ஹிந்து மதம்
இஸ்லாம், யூதம்
நாமமுயர் சீனத்துத் தாவு
மார்க்கம், நல்ல
கன்பூசி மதம் முதலாப் பார்
மேல் — யாமறிந்த
மதங்கள் பல உளவாம்.
அன்றே
பாவினுக்கும் உட்புதைந்த
கருத்திங் கொன்றே "

என்று விளக்குகிறார் அவர்'

பல பெயரிட்டு நாம் அழைக்கும் தெய்வம், ஒரு பொருளும் இல்லாததோர் ஒண் பொருள். பெயரின்றி எப்பொருளையும் மனத்தில் புரிந்து கொள்ள முடியாத நமது சிறுமையால் எண்ணற்ற பெயர்களிட்டே அதை உருவகப்படுத்தி உணரவேண்டியிருக்கிறது. ஆயின் அப்பெயர் இறைவனை உணருவதற்குரிய தொரு வாயில்தான் என்பதை மறந்து விடக்கூடாது என்கிறார். வடிவத்தையும் பெயரையும் உண்மையென்று கருதி உட்கருத்தான ஒண்பொருளை இழந்து விடுவது பேதைமை. என்று பாடுகிறார் பாரதி.

## எங்கும் எதிலும் இறைவன்

பாரதி கடவுள்பற்றுக் கொண்டவர். இவரது பக்தியின் சிறப்பு பரமனிடம் இவர் கொண்டிருந்த அன்பு, பக்தி, பல வடிவங்களில் கதைகளாகவும், கவிதைகளாகவும், கட்டுரைகளாகவும் கற்போர் கவனத்தைக் கவர்ந்துள்ளது. தேசிய உணர்ச்சியானாலும் சரி, விடுதலை வேட்கையானாலும்சரி குழந்தைப் பாட்டானாலும் சரி எங்கும் கடவுட் கொள்கை நேரிடையாகவோ மறைமுகமாகவோ வெளிப்படுவதைக் கூர்ந்து படிப்போர் விளங்கிக்கொள்வர்.

**பணக்காரனாக வேண்டுமா?**

வாங்கியகடனை, ஒழுங்காக காலங்கடத்தாமல் குறிப்பிட்டகாலத்தில் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். கடனை ஒழுங்காகத் திருப்பிக் கொடாதவர்கள் எந்தக் காலத்திலும் பணக்காரனாக முடியாது. இந்த யோசனையைக் கூறியவர் யார் தெரியுமா? உலகின் மாபெரும் தனவந்தர் ராக்பெல்லர்.

இறைவனை எந்நேரமும் நினைக்கிருரே பாரதி. அது எப்படி முடிகிறது அவரால் !

" நெரித்த திரைக்கடலில் நின்
முகம் கண்டேன்
நீல விசும் பிடை நின்முகம்
கண்டேன்
திரித்த நுரையின் இடை நின்
முகம் கண்டேன்
சின்னக் குமிழிகளில் நின் முகம்
கண்டேன் " என்றும்,

" பார்த்த இடத்தில் எல்லாம்
— உன்னைப் போல்
பாவை தெரியுதடி."

என்றும் நீங்காத நினைவின் காரணத்தைப் பக்தன் எடுத்துரைக்கின்ருன். அனைத்திலும் ஆண்டவனைக் காண்பதோடு அடியவனின் பக்தி நின்று விடுவதில்லை. அனைத்தும் ஆண்டவனாகவே தோன்றுகின்றது

## இறைவனின் இனிய பக்தன்

இறைவனின் புன்னகை சோலைமலர். அவனது நினைவுகள் நீலக்கடலின் அலைகள். அவனது குரலினிமை குயிலின் இனிய குரலோசை. "இங்கு நித்தம் நிகழ்வதெல்லாம்" உந்தன் திருவருளால் தான் என்று பாரதி உணரும்போது பரமனை மறப்பது எப்படி ?

" வானத்துப் பறவைகளில்,
கானத்து மலர்களில்
குன்றின் மேல் எரியும் விளக்கு
களில், கடுகிலே
புளிக் காரத்திலே எங்கணும்
இறைத் தன்மையின்
இனிய தொடர்பினை இறை
மகன் இயேசுக் கிறிஸ்து
உணர்ந்து உலகிற்கு ஓத
வில்லையா? பார்க்கும்
இடமெல்லாம் ஒரு நீக்கமற
நிறைந்திருக்கும்
பரிபூரண ஆனந்த வெள்ள
மாகிய கடவுளை
விசுவாசக் கண்களால் கண்டு
கொள்ளத் தெரிந்தவனே

இறைவனின் இனிய பக்தன். இந்தப்பக்தி பாரதியை அவர் அறியாமலே வருகிறது. அவரை மாயமாகவந்து திடீரென அணைத்துக் கொள்கிறது. அதனை உள்ளத்திலே உணர்ந்தபின் உவகை வெள்ளமாய், ஆனந்தத் தேனாய் இன்பம்பொங்கித்ததும்ப

" கண்ணை என்று அலறி
வீழ்ந்தேன் — மிகப்
போது சாகவில்லை அதற்குள்
— எந்தன்
போதந் தெளிய நினைக்
கண்டேன் "

என்று கூறி, இறைவனுடன் ஒன்றித்திருப்பதே தனி இன்பம் அவன் உறவு இல்லாவாழ்க்கை அர்த்தமற்றது என்பதைப் புரிய வைக்கிருர்.

பக்தன் பாரதிக்கு உயர்வும் புகழும், செல்வமும் சிறப்பும் எல்லாம் அந்தப் பரம்பொருளே அன்றி வேறில்லை. இறைவனே இன்பம் —

மார்பில் அணிவதற்கே —
உன்னைப்போல்
வைரமணிகள் உண்டோ
சீர்பெற்று வாழ்வதற்கே —
உன்னைப்போல்
செல்வம் பிறிதும் உண்டோ ?

— என்று எண்ணி இறைவன் சரணடைகிறார் பாரதி.

## முடிவுரை

காலமும், வெளியும் வரம்பற்றவை. மனித அறிவிற்கும் சக்திக்கும் எட்டாத ஒரு புதிர். பாரதி ஒளிபெற்று இன்பங்கண்டு ஒளியைப் பரப்பி இன்பத்தைத் தந்தான். மனித இனத்திற்கு அவன் கண்ட கனவுகளெல்லாம் நினைவாகக் கொண்டுதான் இருக்கின்றன.

பரமனை, அவர் உருவில் வந்த பரந்தாமனைப் பக்திக்கவி பச்சிளம் பாலகனுகக் கொண்டாடினுலும், குழந்தையாகக் கொஞ்சி மகிழ்ந்தாலும், காதலியாகக் கட்டித் தழுவினுலும், தந்தையாகப் போற்றினுலும், குருவாகத் தொழுதாலும் அவருக்குத் தம்மைக் கையளித்து "இதோ உன் அடிமை" என்று பரம் பொருளின் பாதத்தில் பக்தன் பாரதி பணிந்து பரவுவதைத் தான் காணமுடிகிறது.

தேசபக்தி, தெய்வபக்தி, சுதந்திரம் —என்று எந்தத் துறையையும் பாரதியார் விட்டு வைக்கவில்லை. பாரதியாரின் பக்திக் கவிதைகள் நம் நாட்டின் கருவூலம். அவற்றைப் பெற்றிருக்கும் நாம் அனைவரும் பாக்கிய சாலிகள் தாம்.

## உண்டகளை

"உண்டகளை தொண்டருக்கும் உண்டு" என்பார்கள். உணவுண்டவுடன் சற்றுநேரம் உறங்கி எழும்பும் பழக்கம் பலரிடம் இருக்கிறது. அப்படி உறங்குவதால் உண்ட உணவு சிரணிக்க அதிக நேரம் எடுக்கும். வயிற்றுக்கோளாறு ஏற்படும். சோம்பேறித்தனம் குடிகொள்ளும். உடல்நிறையும் அதிகரிக்கும். எதிலும் மந்தஉணர்ச்சி ஏற்படும். வேண்டுமானுல் உட்கார்த்த படியே கொஞ்சம் கண் அயரலாம். படுக்கக் கூடாது.

# இடுக்கணுக்கு ஈடுகொடுத்தல்

இரவுபகல் நிலவுவெயில் தென்றல் சூறை
இருவேறிவ் வுலகத்தின் இயற்கை யாகும்
திருமகிழ்வு பெருகுதுயர் மனித வாழ்வின்
திசைகாட்டும் திகைப்பூட்டும் செல்லும் மீளும்
மருவுபுகழ் உயர்வாழ்வு நிறுத்தல் நோற்பார்
மலைத்திடஞே டெதிர்நீச்சல் நீந்தல்வேண்டும்
உரவுடையோர் தம்முளத்தின் உறுதி காப்பார்
உற்றதுயர்ப் போர்க்களத்தே வெற்றிகாண்பார்.

இடதுபுறம் வீழ்ந்திருக்கும் ஏனந் தன்னை
ஏறிட்டும் பாராதே வலது பாங்கர்
கடகரியைக் கொன்றருந்தும் புலியே போன்று
கடினவழி எதிர்ப்பின்மேற் கருமம் ஆற்றும்
திடமனதே வெற்றிமனத் திறவு கோலாம்
தீமைகளைச் சுட்டெரிக்கும் தீயின் நாக்கு
முடவனுக்கும் கொம்புத்தேன் ஆசை வேண்டும்
முயற்சியிலார் வீழ்ந்துதொழும் தெய்வம் துன்பம்

நீர்க்குவளை கோடையிலும் வாடா தோங்கும்
நிலம்தன்னை அகழ்வோரை நிமிர்ந்து தாங்கும்
போர்க்களத்துப் பின்வாங்கும் பேடி கைவாள்
புல்லுக்கும் கீழாகும் பூமிப் பாறை
வேர்க்கெதிர்த்து நிற்காது பிளந்தே போகும்
வீரமுளார் நெஞ்சத்தான் வாகை சூடும்
ஆர்த்தெழுந்து பொங்குமெரி மலையின் வேகம்
அடிமைநிலை மீட்டதென்ப தறியார் யாரே.

பாலையிலே நீருற்றுக் காற்றில் ஊஞ்சல்
பாய்ந்துவரும் அருவியில்மின் சாரப் பூக்கள்
நீலமணி வானப்பொன் நிலவிற் பாய்ச்சல்
நீள்வெளியிற் சுழல்கின்ற நடனக் கூத்து

தாலமெலாம் எண்ணரிய புதுமைக் காட்சி
தந்ததெந்த நல்லதிஷ்டம்? மாந்தி ரீகம்?
காலமெலாம் பொங்குதுயர்க் கனவில் மூழ்கிக்
கடைந்தெடுத்த நம்பிக்கை வைரம் உண்மை

அலைகுமுறி ஆர்ப்பரிக்கும் கடலின் மூச்சுக்(கு)
அடிபணியாக் கொலம்பஸ்தன் ஆண்மைத் தீரம்
விலைமதிக்க முடியாத உயிரை ஈந்தே
வெறிகொண்டோர் நிறத்திமிரின் கரத்தில்வீழ்ந்த
தலைமகனும் லிங்கனது தகைசால் வீரம்
தம்குறிக்கோள் நிலைநாட்டத் தந்தார் நஞ்சை
முலைபருகும் குழந்தையெனப் பருகி மாண்ட
மூதறிஞர் சோக்கிறற்றீஸ் முடிசேர் வாழ்வு

வெடியெதிர்த்து நின்றுயர்ந்த கெனடி வேந்தன்
விறல்வீரன் லூதர்கிங் பிறர்வாழ் வோங்கப்
படிதனிலே இருள்படியாப் போர் நடாத்திப்
பலியான வரலாற்றின் பண்புக் கோவை
இடியெனவே முழங்கியவெண் சிங்கந் தன்னை
எதிர்த்தறப்போர்க் களத்தினிலே வென்று காந்தி
கொடிபிடித்தே துயர்ப்பகையைக் கொன்றவாழ்க்கை
குவலயத்தோர்க் குறுதிதனைக் கொடுக்கும் வேதம்

வயிற்றுக்கும் அறிவுக்கும் வாழ்வைக் கொல்லும்
வறுமைக்கே அறைகூவும் வலிமை சேர்ப்போம்
உயிர்ப்பிச்சை ஏற்காதே மானம் போனுல்
உயிர்நீக்கும் கவரிமான் உள்ளங் காண்போம்
கயிற்றுக்கும் நஞ்சுக்கும் தலையைச் சாய்த்தே
கவலைக்குத் தோற்கின்ற நெஞ்சம் வேண்டாம்
முயற்சிக்கே அதிஷ்டம்தன் முகத்தைக் காட்டும்
முள்ளடர்ந்த செடிநடுவே ரோசா பூக்கும்.

யாழ் 'ஜெயம்'

# பேராசிரியர் கைலாசபதியின் சிந்தனைப் பாதை

ஏ. யே. வி. சந்திரகாந்தன்
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்.)



பேராசிரியர் க. கைலாசபதி 1974-ம் ஆண்டுமுதல் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ். வளாகத் தலைவராகப் பணிபுரிந்தார். 1977இல் யாழ். வளாகம் பல்கலைக்கழகமாக்கப்பட்டபோது அவர் கலைப் பீடாதிபதியாகவும், தமிழ்த்துறையின் தலைவராகவும் கடமையாற்றினர். கிறிஸ்தவ நாகரிகத் துறையின் ஆரம்பத்திற்கும், வளர்ச்சிக்கும் உந்து சக்தியாக அமைந்த அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும். இந்த ஏப்றில்மாதம் 5-ந்தேதி இவரது பிறப்பின் 50-வது ஆண்டாகும். இவருக்கு அஞ்சலி செலுத்து முகமாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

பேராசிரியர் கைலாசபதி மறைந்து விட்டார் என்ற பேரதிர்ச்சி எங்கள் நெஞ்சங்களை இன்னும் பாரமாக அழுத்திக் கொண்டேயிருக்கின்றது. அவர் பலநூறு ஆண்டுகள் வாழவேண்டும், அவர் சொல்லின்பத்தை, அவர் அறிவின் பயனை நாம் என்றும் நுகர்ந்து கொண்டே இருக்கவேண்டும், விமர்சனம் — திறனாய்வு என்ற உரமான விழுதுகளில் தாங்கப் பெற்ற விசாலமான அவரது சிந்தனை விருட்சத்தின் நிழலில் இன்பம் துய்க்க வேண்டும் என்ற நினைவில் ஆழ்ந்திருந்த இலக்கிய உலகினைத் தனியிருளில் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டார் அவர்.

ஈழத்திலும், தமிழகத்திலும் வாழ்கின்ற இலக்கிய கர்த்தாக்களின், பத்திரிகையாளரின், தமிழறிஞரின் மாணவர்களின் இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் பேராசிரியர் கைலாசபதி மறைந்து நான்கு மாதங்கள் ஆகிவிட்ட போதிலும் பசுமையான பல நினைவுகள் இவர்களது உள்ளங்களில் இன்றும் படர்ந்து வருகின்றது என்பதையே அன்னாரின் நினைவாக நாட்டின் பல பாகங்களிலும் நடாத்தப்பெறும் அஞ்சலிக் கூட்டங்களும், வழங்கப்பெறும் இரங்கல் உரைகளும் அவர் புகழ்சாற்றி வெளியாகும் கட்டுரைகளும் செய்திகளும் எடுத்துரைக்கின்றன. இட்டு நிரப்ப முடியாத ஓர் இடைவெளியை அவர் விட்டுச் சென்றார் என்ற மனவேதனை எம்மை வாட்டுகின்ற போதிலும், வருடத்திற்கு ஒரு முறை மட்டும் நாம் நினைத்துப் பார்க்கும் நல்லவர்கள் பட்டியலில் அவரும் சேர்ந்தாகி விடமாட்டார் என்ற நல்லெண்ணம் எம் விழிநீர் துடைத்து ஆறுதல் தருகின்றது. அவரது ஆழறிவும், ஆற்றலும், சிந்தனையும், சொல்நயமும், செயற்றிறமும், அன்பும், அருளுடைமையும், நற்பண்பும், பாசநெஞ்சும் வற்றாத நதியாக எம் உள்ளங்களை என்றுமே நனைத்திருக்குமாதலால் பசும் நினைவுகள் அங்கு காயாது நாள்தோறும் வளரும் என்பதில் ஐயமில்லை.

புராதனப் பெருமை உடைத்தான நற்றமிழ் இலக்கியத்தை ஆய்வதோடு ஆரம்பித்த அவர் பணியானது கால வளர்ச்சியில் இலக்கியம் என்ற வரம்பினையும் கடந்து மெய்யியல், சமயம், சமூகவியல், அரசியல், பொருளியல், மானிடவியல், அழகியல், அறிவியல் போன்ற விரிந்த பல துறைகளையும் சென்றடைந்ததென்பது அவரது ஆக்கங்களிலும் எழுத்துகளிலும் தெளிவாகத் துலங்குகின்றன. ஆகவே பேராசிரியரின் சிந்தனைக் களஞ்சியத்தைப் புறநிலையில் திறனாய்வு செய்து "இதுவா அவரது சிந்தனைப் பாதை?" என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு உள்ளாகாமல் எமது அகநிலைத் தன்மையில் நாம் அவரோடு கொண்டிருந்த உறவினதும், உரையாடலினதும் பின்னணியிலும் அவரது ஆக்கங்களுள் ஒருசிலவற்றைக் கற்றதினால் நாம் பெற்ற அறிவின் ஒளியிலும் அவரது சிந்தனைப் பாதையினை "இதுதான் அது" என்று தீர்க்கமாகக் கூறாமல், "அது இப்படி எமக்குத் தென்படுகிறது" என்று இனம் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. விரிந்து செல்லும் பாதை :

இலக்கியத்தின் பன்முக வடிவங்களாகிய சிறுகதை, நாவல், கவிதை, வசன கவிதை, நாடகம், நாட்டுக் கூத்து போன்றவற்றையும், சமுதாயத்தின் அங்கங்களாகிய அரசியல், சமயம், பொருளாதாரம், சமூகநெறி, கல்வி, கலை, பண்பாடு, சமூகத் தொடர்புச்

சாதனங்கள் ஆகியவை அனைத்தும் அவர் தமது கூரிய பார்வைக்கு உட்படுத்திக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார். ஆகவே, அவரது சிந்தனைப் பாதையை இனம்காண முயலும் வேளையிலே மேற்கூறியவைபற்றி அவர் கொண்டிருந்த எண்ணத்தினை எடுத்துரைப்பது இன்றியமையாததாகும்.

இலக்கிய விமர்சனம் என்ற தளத்திலே அவரது பாதங்கள் ஆழமாகப் பதிக்கப்பட்ட போதிலும், அத்தளத்தில் நின்றபடியே அறிவியலின் விரிந்த பல துறைகளையும் கிளைகளையும் மதிநுட்பத்தோடும் சாதுரியத்தோடும் விமர்சிக்கும் திறமையினை அவர் பெற்றிருந்தார் என்பது வெள்ளிடைமலை. தவிர, மனித உரிமைக்கான கூக்குரல்களும், மக்கள் போராட்டங்களின் அவலத் தொனிகளும், சமுதாயத்தில் பிரிவினை வேற்றுமை என்ற நோய்களால் தாக்கப்பட்டு, தீண்டப்படாதவரெனத் தள்ளி வைக்கப்பட்ட மக்களின் வேதனை விசும்பல்களும், அவரது உள்ளத்தினை ஆழமாகத் தொட்டது என்பதனை அவரது எழுத்துக்கள் தெளிவாகப் பிரதிபடுக்கின்றன. எனவே அவரது சிந்தனைப் பாதையின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாக, சமுதாயத்தின் இத்துயரச் சூழ்நிலையும் காட்டப்படவேண்டும்.

## 2. திறனாய்வின் தனித்துவம் :

பேராசிரியர் கைலாசபதியின் சிந்தனைப் போக்கின் அடிப்படையாகவும், உந்து சக்தியாகவும் அவரது திறனாய்வு கண்ணோட்டம் உபயோகிக்கப் பட்டிருக்கின்றமையினால் அவரது திறனாய்வு நோக்கின் சிறப்பியல்புகளை முதலிலே இனம்கண்டு கொள்ளுதல் பேராசிரியரின் சிந்தனைப் பாதையினை சீரிய முறையிலே நிர்ணயிக்க உதவும்.

இலக்கியம் — பொருள், வடிவம், அலங்காரம், மொழிநடை, நம்பகத்தன்மை, ஏற்புடைமை போன்ற பல்வேறு அம்சங்கள் காலத்திற்குக் காலம் வெவ்வேறு வகையிலும் அளவிலும் முதன்மையும் முக்கியத்துவமும் பெறுதல் வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல என்றும், ஒவ்வொரு காலப் பகுதியிலும் நடப்பில் இருக்கின்ற பொருளாதார, அரசியல் சமுதாய அமைப்புகளின் பிரதிபலிப்பாகத் தோன்றும் தத்துவக் கோட்பாடுகளுக்கு ஏற்பவே இலக்கியம் பற்றிய சிந்தனைகள் அமைகின்றன என்பதையும் அவர் தீர்க்கமாக மனம் கொண்டிருந்தமையால் அவரது திறனாய்வு சிந்தனையின் குறிப்பாக இலக்கிய விமர்சனத்தின் அடிப்படையாக அவர் சமுதாய பிரச்சினைகளையும் மானிட வர்க்கத்தின் மனவேதனைகளையும் கொள்ளலானார். எனவேதான் சமுதாய மாற்றத்திற்கு

விமர்சன இலக்கியத்தை ஓர் ஆயுத மாகப் பயன்படுத்த வேண்டும் என்ற உறுதிப்பாட்டைத் தமது இலக்கிய விமர்சனங்களின் அத்தி வாரமாக்கினார். '' விமர்சனம் என்பது உலகை விபரிப்பது மாத் திரமன்று, அது உலகத்தை மாற்றி யமைப்பதற்கு உழைக்கும் வர்க்க மும், அதன் நேச சக்திகளும் ஓயாது பயன்படுத்தும் அறிவா யுதமாக இருத்தல் வேண்டும்'' என்ற நோக்கினை அவர் தமது விமர்சனச் சிந்தனையின் விசுவா சப் பிரமாணமாகக் கைக்கொண் டார்.

இங்ஙனம் விமர்சனத் துறை யின் தளத்தையும், களத்தையும் இடமாக அமைத்துக்கொண்டு தம் இலக்கியப் பயணத்தைச் சமூக நலன், சமுதாய மாற்றம் என்ற ஒளியின் துணைகொண்டு ஆரம்பித் தார். முற்போக்கு இலச்கியத் தின் முன்னோடியாக விளங்கிய இவர் தாம கையோடு எடுத்துச் சென்ற இவ்வொளியின் துலக்க மான வெளிச்சத்தில் தாம் நடந்து சென்ற பாதையிலே தடைகளா கப் பரவியிருந்த முட்களையும் ஏனைய தடயங்களையும் அகற்றிச் செப்பனிட்டார். இதனாலே தான் ஆன்மீக சிறைக்குள்ளும், வேதாந் தக் கூட்டுக்குள்ளும் இலக்கியத் தை அடைத்து விமர்சிக்க முயன்ற ஒரு சிலர், பேராசிரியரின் சொல் லாயுதத்தினால் தாக்கப் பட்டார் கள்.

ஒரு காலத்தில் கல்வியின் பயன் வீடு பேற்றினை அடைவது, மெய்ப்பொருள் காண்பது என்ற வகையிலே கொள்ளப்பட்டது. இன்று அந்நிலை மாறி சமுதாய வளர்ச்சிக்கும் மனித முன்னேற் றத்திற்கும் மேம்பாட்டிற்கும் பயன்படும் கருவியாகக் கல்வி கொள்ளப் படுகின்றது. கல்வியின் உபயோகத்திலும், உட் பொருளி யற் தன்மையிலும் ஏற்பட்ட இம் மாற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்ற பேராசிரியர் இங்குகூட சமுதாய மாற்றம் என்ற அடிப்படையில் கல்வி பரிணாம வளர்ச்சி பெறுவ தையே எமக்கு உணர்த்துகிறார். எனவே எங்கும், எதிலும் சமுதா யக் கண்ணோட்டத்தைப் புகுத்தித் திறனாய்வு செய்வதை அவர் தமது தனிப்பெரும் கோட்பாடாகக் கொண்டார்.

## 3. சமயமும் இலக்கியமும்

சமயத்திற்கும், இலக்கியத் திற்கும் இடையிலே புராதன காலந்தொட்டு வழங்கிவரும் இணைப்பும், பிணைப்பும் எத்தகைய விதத்தில் ஒன்றையொன்று ஏத்தி யும், இயக்கியும், ஊக்கியும், வளர்த்தும் வந்தன என்பதை இலக்கிய வரலாற்று உண்மையாக அவர் ஏற்றிருந்தார். இலக்கியத் தின் துணைகொண்டு சமயங்கள் வளர்ந்தன என்பதையும், சமயத் தின் உட்கிடக்கைகள், கோட் பாடுகள் ஆகியவற்றைக் கருப் பொருளாக்கி இலக்கியம் புனைதல் ஒரு மரபாகவே கணிக்கப்பட்ட

காலமும் இலக்கியத்தில் வழங்கி வந்தது என்பது ஓர் வரலாற்று உண்மை. தமிழில் காலம் காலமாகப் போற்றப்படும் பக்தி இலக்கியங்கள் இத்தகைய சமய, ஆன்மீக உணர்ச்சியினதும் வெளிப்பாடாக உணரப்படுகின்றன. இறைவனைச் சிக்கெனப் பிடித்து அவ்வனுபவத்தின் அடியிலே எழுந்த இவ்விலக்கியங்களும் ஏதோ ஒரு வகையிலும், அளவிலும் சமுதாய மாற்றத்தை விளைவிக்கும் சக்திகளாக அமைந்தன என்பது மறுக்க முடியாததாகும்.

சமயம் என்பது ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்திசெய்ய எழுந்த ஒரு நிறுவன அமைபபு என்று நோக்காது, சமுதாய வளர்ச்சிக்காக மானிடவர்க்கத்திற்குப் பணிபுரியும் ஒரு சேவைத் தளமே என்ற எண்ணத்தையே பேராசிரியர் மனங்கொண்டார்.

## 4. தத்துவப் பிரதிபலிப்பு :

வர்க்கப் பிளவுகளும், பிரிவினைகளும் விசனிக்கத்தக்க வகையில் சமுதாயத்தின் வனப்பையும், வளர்ச்சியையும் பாதித்திருக்கின்றன, பாதிக்கின்றன என்பது அனுபவம் கற்பிக்கும் ஓர் உண்மை. இலக்கிய கர்த்தாக்களும், விமர்சகர்களும், ஆக்க இலக்கியப் படைப்பாளர்களும் சிறப்பாகக் கவிஞர்கள், நாவலாசிரியர்கள் போன்றோரும் தாம் சார்ந்திருக்கின்ற அல்லது தமக்குச் சாதகமான வர்க்கக் கூறுகளின் தத்துவ நெறிகளையே தமதாக்கி, அந்நியமங்களைத் தம் படைப்பின் வழியாகப் பிரதிபலிக்கின்றனர், அல்லது வெளிக் கொணர்கின்றனர் என்பதைத் தெளிவாகவும், துணிவோடும் சுட்டிக் காட்டிய பெருமை பேராசிரியருக்குண்டு.

"சங்ககாலப் புலவனான கணியன் பூங்குன்றனாரில் இருந்து சமகாலக் கவிஞன் கண்ணதாசன் வரையில், தாமப்பல் கண்ணனார் முதல் தளையசிங்கம் ஈறாகத் தத்துவம் இன்றி எழுதியவர் இல்லை. சமரசம் பேசிய வள்ளுவருக்கும் அடிப்படையில் வர்க்கச்சார்பு இருந்தது. அதை அவரால் மீற இயலவில்லை. வர்க்கச் சார்பு இன்றிப் பாடியவர்கள் இல்லை என்பது உறுதி. ஆகவே தத்துவம், தத்துவம் பிரகடனம் என்பன வேண்டுமா, வேண்டாமா என்பது அல்லப் பிரச்சினை. எந்தத் தத்துவம் வேண்டும் என்பதே எழுத்தாளன் எழுப்பவேண்டிய இன்றியமையாக் கேள்வியாகும்."

சமுதாயத்தின் இயக்கவியல் கோட்பாட்டைஅடிப்படை யாக்கி இலக்கியம் சமைக்கப்பட வேண்டும் என்ற உறுதிப்பாட்டோடு இலக்கியப் பணிபுரிந்த பேராசிரியர் கைலாசபதி சமுதாய வளர்ச்சிக்கும், சமூக மறுமலர்ச்சிக்கும் தத்துவம் துணைநிற்க வேண்டும் என்பதனை முழுமையாக உணர்ந்திருந்தார். இலட்சிய தத்துவமாக மாக்சிசக் கோட்பாட்டை ஏற்றுசெயற்பட்ட அவர் ஏனைய தத்துவக் கோட்பாடுகளைக் குறைத்து மதிப்பிட்டவர் அல்லர்

இன்றைய சூழ்நிலையில் சமுதாய எழுச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் பாதைகாட்டும் ஓர் தத்துவக் கோட்பாடாகவே அவர் மாக்சிஷத்தைப் போற்றி வந்தார்.

## 5. முற்போக்குச் சிந்தனை :

ஆக்க இலக்கியம், முற்போக்கு இலக்கியம் என்ற பதங்கள் அவரால் பலதடவைகள் உபயோகிக்கப் பட்டமையினுல் இப்பதங்களின் உட்கிடக்கைகளை இனங்காணுதல் நன்மை பயக்கும். கலை கலைக்காகவே, இலக்கியம் ரசனைக்காகவே என்று இலக்கிய ஆக்கங்களைப் பொழுதுபோக்குச் சாதனங்களாகக் கொண்டவர்களைச் சாடியும் அதே வேளையில் இலக்கியப் படைப்புகளை ஆன்மீக ரீதியில், வேதாந்தத்தின் உள்ளியலில் உரைத்துப் பார்க்க விழைந்தவர்களின் குறுகிய மனப்போக்கைச் சுட்டிக்காட்டி முற்போக்கு இலக்கியம் எவ்வாறு அமைய வேண்டும் என்று தெளிவுபடுத்திஞர்.

சமுதாயத்தின் பிரச்சினைகளை, இன்னல்களை இனம்கண்டு அதற்கான அடிப்படைக் காரணிகளை அடையாளம் காட்டி, அதை மாற்றியமைக்க வழிதேடித் தன் ஆக்கங்களின் சக்தியாலும் பலத்தாலும் அதை ஓரளவேனும் மாற்றிட முயல்பவரே முற்போக்கு இலக்கியவாதி என்ற அளவிலேயே அவரால் முற்போக்குவாதம் கணிக்கப் பட்டது.

திருநீறு தரிப்பவன், ஆலயம் தொழுபவன், ஆகமம் படிப்பவன், போன்றோர் பிற்போக்காளர்; எமது கலாச்சார அங்கங்கள், பழமைவாய்ந்த மரபுகள், நெறிகள் பிற்போக்கானவை — என்பவர்களே முற்போக்குவாதிகள் என்ற தப்பறைக் கொள்கையை நிராகரித்து முற்போக்குச் சிந்தனையின் நேர்முக நிலைகளை நிரைப்படுத்தியவர் பேராசிரியர் கைலாசபதி ஆவர்.

தன்னலத்தை முழுமையாக அகற்றி, யாரொருவன் மனித வர்க்கத்தின் ஒரு பிரிவின் மீதோ அல்லது பல பிரிவுகளின் மீதோ இனப் பாகுபாட்டையும், வகுப்பு வாதத்தையும், துவேஷத்தையும் வளர்க்காமல், மனித இனத்தின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும், சமுதாயத்தின் உயர்ச்சிக்காகவும் உழைக்கின்றுனே, தன் வாழ்வையே அதற்காகத் தியாகம் செய்கிறுனே அவனே உண்மையான முற்போக்குவாதி; அவனே சரியான பாதையைத் தெரிந்து அதில் தானும் வழிநடந்து மற்றவரும் நடக்க வழிசமைக்கும் சக்திகொண்டவன் என்பதனைத் தனது வாழ்வில் காட்டி முன்சென்ற பெருமை எமது அன்புக்குரிய பேராசிரியர் கைலாசபதியைச் சாரும். அவர் வாழ்ந்துகாட்டிய இலட்சியப் பாதை, அவர் விட்டுச்சென்ற சிந்தனைப்பாதை, அவர் காட்டி நிற்கும் வாழ்க்கைப் பாதை மனித இதயம் கொண்டவர் எவருக்கும் ஆதர்ஷமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

# இளமை போகுமுன்........!

— M. R. கபிரியேல் —
நாரந்தனை

உள்ளக் கடலினிலே
உணர்ச்சி அலைகளையே
துள்ளச் செய்துவந்த — இளமை
தூரப் போகின்றதே !

ஆயிரந் துணிவுகளை
அயராச் சக்தியினை
ஓய்விலா தளித்துவந்த — இளமை
ஓடிப் போகின்றதே !

உடலில் மினுக்கேற்றி
உறுதி அழகுடனே
திடமாய் விளங்கவைத்த — அழகு
தீர்ந்து போகின்றதே !

கண்ணில் ஒளி பெருக்கிக்
காதல் சுவையேற்றி
எண்ணில் கனவூட்டும் — இளமை
எட்டிப் போகின்றதே !

கதிரோன் மறைந்தபின்
கப்பும் இருள்போலப்
புதுமைத் துடிப்பொழிய — இளமை
புலம்பிப் போகின்றதே !

முடியை வெளுப்பாக்க
மூத்துப் பல்லுதிர்க்கத்
தடியை ஊன்றவைக்க — இளமை
தாவிப் போகின்றதே !

வீட்டில் திருடிவிட்டு
வெளியேறும் திருடன்போல்
கூட்டைக் குலைத்துவிட்டு — இளமை
கூறுமல் போகின்றதே !

எல்லா ஆட்டங்களும்
இத்துடன் முடிந்ததென்று
நல்லா ரும்நகைக்க — இளமை
நழுவிப் போகின்றதே !

இத்தனை ஆண்டுகளாய்
என்னுடனே வாழ்ந்து
எத்தியே செல்கின்ற — இளமை
எங்கோ போகின்றதே !

இளமை போகுமுன்
இவ்வுடல் இடர்ப்படுமுடி
வளமை பெற்றிடவே இறையை
வாழ்த்தி வணங்கிடுவீர் !

## உங்களுக்குத் தெரியுமா ?

★ ஓயாது நமக்குத் தொந்தரவு தரும் இந்த எலிகளுக்குப் பசி இருந்தாலும், இல்லாவிட்டாலும் எப்போதும் எதை யாவது கடித்துக்கொண்டிருக்கும். சவர்க்காரம், சப்பாத்து, றப்பர்ப் பொருட்களைக் கண்டால் எலிகளுக்கு வேட்டை. எலிகளின் முன்னம் பற்கள் ஆண்டொன்றுக்கு நான்கு அங்குலம்வீதம் வளர்கிறதாம். இந்தப் பற்கள் தேய்வதற்காகவே இப்படிக் கடிக்கின்றனவாம்.

★ உடல் உழைப்புள்ளவர்களுக்கு உடம்பில் வலி ஏற்படுவதில்லை. உழைக்காதவர்களுக்குத்தான் அடிக்கடி உடல் உளைவும் வலியும் உண்டாகின்றன. ஏனெனில் அவர்கள் உள்ளத்துக்கு அதிக வேலை கொடுக்கிறார்கள். மன உளைச்சலும் களைப்பும் தசைகளை ஆட்டுகின்றன. அதனாலேதான் உடம்பு வலிக்கிறதாம்.

# சிந்தனைகள் சிதறுகின்றன

இன்றைய இளம் சமுதாயத்தினர் நாளைய தமது வாழ்க்கையைப்பற்றிய சிந்தனைக் கதிர்களைப் பலகோணங்களிற் சிதறவிடுகின்றனர். இச்சிந்தனைகளுக்கு எல்லாம் இன்றைய இளம் சமுதாயம் எப்படி முடிவு எடுத்துக் கொள்ளப்போகின்றது. இவை ஒரு நிம்மதியில்லாத புனிதமற்ற ஒரு சமுதாயத்திற்குக் கொண்டு சென்றுவிடுமா ? இவ்வாறன ஒரு வித அச்சத்தை இன்றையஇளம் சந்ததி இருபாலாரினதும் சிந்தனைகளை எண்ணிப்பார்க்கும்பொழுது சிந்திக்கத் தூண்டுகின்றது.

நமதுநாட்டில் நிலவிய பொருளாதார அரசியல் நிலைமைகள் ஆரம்ப காலத்தில் தொழில்தேடி வெளிநாடுகளுக்குப் புறப்பட வைத்தது. இவை காலப்போக்கில் ஒவ்வொரு வீடும் வெளிநாட்டு வருமானத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கவேண்டிய நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. இவ்வாறு நமது தாய் நாட்டிற்குப் பிரியாவிடை கொடுத்தவர்களின் வாழ்க்கைபற்றிச் சரியான நிலைமை தெரியாது கற்பனையில் ஒரு வித முடிவுகளைத் தாங்களாகவே எடுத்துக்கொண்டார்கள். இதன் விளைவாய் ஆரம்பகாலத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் காலப்பொழுதில் ஐரோப்பிய நாடுகளுக்கும் வேலைதேடிப் படையெடுக்கலானார்கள். இதில் ஆரம்பத்தில் வாலிபர்கள்தாம் முதலிடம் வகித்தார்கள். ஆனால் பின்னர் எங்கும் எதற்கும் சமன் என்று போர் தொடுத்துவிட்ட மங்கையரும் படையெடுக்கலானார்கள். இவைகள் தற்பொழுது முடிந்து விட்ட அத்தியாயங்கள்.

இதன் விளைவாய் இளம்சந்ததியினர் புதுவித வாழ்க்கையைத் தேடிக்கொண்டார்கள். எந்தவித போராட்டங்களையும் நடத்தாமலேயே, பெற்றோர், குடும்பம், சமுதாயம் வகுத்த கட்டுப்பாடுகள் ஒழுக்க நெறிகள் சம்பிரதாயங்களில் இருந்து விடுபட்டுக்கொண்டார்கள். புதிய சூழலில் தாமே உழைத்துத் தமது வாழ்க்கையைச் சுதந்திரமாய் வாழத் தொடங்கிய போது தமது இஷ்டப்படி வாழ்க்கை நடாத்தத் தொடங்கினார்கள் இதற்கு ஒருசிலர் விதிவிலக்கு ஆகலாம். சுதந்திரமான இவ்வாழ்க்கையில் தமது இஷ்டப்படி சுக போகங்களை இருபாலாரும் அநு

பவித்துக்கொள்ள முடிந்தது. இது இன்று நாடு முழுவதும் தெரிந்த விடயமாகும். இதனுல் இன்று இளம் சந்ததியினர் தமது எதிர் கால வாழ்க்கையைப்பற்றிப் பல வாறு சிந்திக்கின்றுர்கள் அவர் களிடம் நிலவும் இவ்வாறன சிந் தனைகளுடன் எப்படி ஒரு வள மான குடும்ப வாழ்க்கையை ஏற் படுத்திக் கொள்ளப்போகின்றுர் கள் ?

நாடு செழிக்க வழிவகுக்க வேண்டும். ஆனுல் அந்தச்சமுதா யத்திற்குக் குடும்பம்தான் வழி காட்டவேண்டும் அந்த நாளைய குடும்பம் அமைதியற்ற சிந்தனை யுடன் இயங்குமானுல் சமுதாயம் எப்படி நாட்டின் முன்னேற்றத் திற்கு வழி சமைக்கப்போகின்றது. இளம் சமுதாயத்தில் நம்பிக்கை யின்மை அதிகரித்துவிட்டது. ஒவ் வொரு பெண்ணும் தனக்குக் கண வராக வரப்போகின்றவரைப் பற்றிப் பலவாறு சிந்திக்கின்றுள். தனக்குக் கணவராகப் போகின்ற வர் திருமணமாகுமுன்னரே தன் இஷ்டப்படி தன் இச்சைகளைத் தீர்க்கப் பெண்களுடன் உறவு வைத்திருந்தவர் என்ற ஓர் அபிப் பிராயம் சர்வ சாதாரணமாய் இளம் மங்கைகளின் உள்ளங்களில் எழுகின்றது. இப்படியான மனச் சஞ்சலிப்பிலும் தமது வாழ்க் கைக்கு ஒரு துணை தேவை என்ற ஒரு நிர்ப்பந்தத்தில் திருமணம் செய்துகொள்ளுகிருர்கள்.

இதே நிலையில்தான் இளைஞர் களும் தமக்கு மனைவியாய் வரப் போகின்றவளைப்பற்றிச் சிந்திக் கின்றுர்கள். பெண்கள் சர்வசா தாரணமாய் நடமாடி,வேலைக்குப் போகப் புறப்பட்டதுடன் வெளி நாடுகளுக்கும் புறப்படத்தொடங் கியதில் இருந்து இளைஞர்கள் பல வாறு சிந்திக்கலானுர்கள். அதற்கு ஆதாரமாய்ப் பல செய்திகள் வெளிவந்தன. இதன் விளைவாய் இருபாலாரும் சிந்திக்கத்தொடங் கியுள்ளார்கள். இது அவர்களின் வார்த்தைகளில் இருந்தே கணித் துக் கொள்ளக்கூடியதாய் உள் ளது.

ஒவ்வொரு பெண்ணும் தனது கணவனைத் தெய்வமாகவும், ஒவ் வொரு ஆணும் மனைவியை இறை வனுல் தனக்குக் கிடைத்த கொடை என்றும் கருதி வாழும் நிலை மேலும் நீடிக்குமா ? இம்மன நிலையில் அப்படியான நிலை நிலவ முடியாது. கணவனுக்குச் சமனுக வருமானம் உடைய மனைவி இம் மனநிலையில் கணவனை அசட்டை செய்யத் தொடங்குவாள். அவ னுக்கு உரிய கௌரவத்தைக் கொடுக்க விரும்பமாட்டாள். அவளிடம் தனித்துவமான ஓர் உறவு இல்லாத காரணத்தால் அசட்டை செய்வாள். இதனுல் கணவனுடன் சண்டை சச்சரவு கள் செய்யத் தொடங்குவாள். இவைகளின் விளைவுகள் குடும்பம் ஒரு போர்க்களமாக மாறும். பிரிந்து வாழ்தல், விவாகரத்து

ஆகியவை சர்வசாதாரணமான சம்பவங்களாக மாறத் தொடங்கும். இது அவர்களுக்கு மாத்திரமன்று, அவர்களின் இணையற்ற செல்வங்களான குழந்தைகளின் வாழ்வும் சீர்கெட்டுச் சிதையத் தொடங்கும். இவைகள் எல்லாம் காலம் காலமாய்ப் போற்றிப் பேணிவந்த கலாச்சார தனித்துவத்தைச் சிதறச் செய்துவிடும். இவை கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாதவை.

இதே நிலையில்தான் இளைஞர்களும் சிந்தித்து முடிவுகளை எடுக்க முனைவார்கள். ''என்னை விரும்பும் ஓர் உயிரே'' என்று தனது மனைவியைப் புகழ்கின்ற மனப்பான்மை ஏற்படாது. திருமணத்திற்கு முன்னரே அப்படியான உறவுகளை அனுபவித்திருந்தால் அவளை ஒரு பாக்கியமாய்க் கருதமாட்டான். அவளின் ஸ்தானம் சர்வசாதாரண பதவிபோல் தோன்றும். அத்துடன் அவளைச் சந்தேகக் கண்களுடன் நோக்குவான். இந்த ஊடலங்களோடு சச்சரவுகளும் சண்டைகளும் மன நிம்மதியற்ற நிலையும் தானாகவே ஏற்படுத்திக் கொள்ளப்படும். இவை நாளடைவில் '' வேண்டாப் பெண்டாட்டி கைபட்டாலும் குற்றம் கால் பட்டாலும் குற்றம் '' என்ற முதுமொழி நடைமுறையாக மாறும். இவைகள் எமது சமுதாயத்தை ஒரு சீர்கேடான நிலைக்குத் கொண்டு சென்றுவிடும். இவைகள் எல்லாம் எமக்கு வேண்டுபவை அல்ல. இல்லறத்தைப் போற்றி பெருமையாய் மகிழ்ந்த எமது சமுதாயம் இந்நிலைக்குத் தள்ளப்படக்கூடாது.

இதற்கு இளம் உள்ளங்களில் இருக்கும் இவ்வாறான சிந்தனைகள் அகலவேண்டும். இளம் உள்ளங்கள் தமக்குக் கிடைத்த சுதந்திரத்தைப் பாவித்துத் தமது இஷ்டப்படி செல்லாது, பிற்கால வாழ்க்கைக்கு ஏற்ப வளமான சிந்தனைகளுடன் செயற்பட வேண்டும். வாழ்க்கையில் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் அவர்களைத் தவறான வழிக்குக் கொண்டு சென்று இருக்கலாம். இவைகள் எல்லாம் நிலையான வாழ்க்கையல்ல. இதனால் எமது உள்ளத்தில் இருந்து தீய சிந்தனைகளை அகற்ற முனையவேண்டும். சிந்தனை வளமாக, வாழ்வும் வளமாகும்.

— குலராணி

# தருமத்தை நிலைநாட்டிய திருக்கரம்

ஸ்பெயின் நாட்டில் (Toledo) ராலடோ என்ற ஊரிலுள்ள ஒரு மாதா கோவிலில்; இயேசுவின் வலதுகை, சிலுவையிருந்து நழுவி, யாரையோ காட்டும் பாவனையில் அமைந்துள்ளதாம்.

இளங் காதலர்கள் இருவர்; அவனோ போருக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறான், எப்பொழுது திரும்பி வருவான் என்று சொல்ல முடியாது. ஆகையால் இருவரும் கோவிலுக்குச் சென்று, இயேசுவின் முன்னால் மண்டியிட்டு, அவன் போரிலிருந்து திரும்பியவுடன், தாங்கள் இருவரும் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாக சத்தியம் செய்து கொள்ளுகின்றனர்.

ஆனால் போரிலிருந்து திரும்பியவுடன் அவன் மனம்மாறி, அவளைக் கல்யாணம் செய்து கொள்ள மறுக்கிறான்.

உடனே அவள் நீதிபதியிடம் முறையிடுகிறாள். "கோவிலிலுள்ள யேசுக்கிறிஸ்துவே தனக்கு சாட்சி" என்கிறாள்.

உடனே நீதிபதி கோவிலுக்கு விரைகிறார். "மேரியின் புதல்வன் யேசுக்கிறிஸ்துவே! இவள் தன்கட்சிக்கு உன்னை சாட்சியாகப் போட்டிருக்கிறாள். இவளைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று சொன்ன இளைஞன் யார், சொல்?" என்கிறார்.

அடுத்த நிமிஷம், எல்லோரும் வியக்கும் வகையில், வலது கரத்தில் பாய்ந்திருந்த ஆணி கீழே நழுவி, அந்த வாலிபனைச் சுட்டிக் காட்டுகிறது. உடனே அந்த வாலிபன் பயந்துபோய், கண்களில் நீர்வழிய, யேசுவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அந்தப் பெண்ணையே திருமணம் செய்து கொண்டானாம்.

அப்படி தர்மத்தை நிலைநாட்டிய கை சுட்டிக்காட்டும் நிலையிலேயே தங்கி விட்டதாம். அவ்வூர் வாசிகள் அவ்வதிசயத்தைக் கூறிப் பிரமிக்க வைக்கிறார்களாம், இத்திருக் கோவிலைத் தரிசிக்க வரும் யாத்திரீகர்களிடம்.

நன்றி: "மங்கை"
தகவல்: பி. பெ.

---

★ எனக்கு மறதியுண்டாகிறது என்று கூறுவது தவறு. அவதானக் குறைவுள்ளவர்களுக்கே ஞாபகமறதி உண்டாகும். கவலை நரம்புப் பலவீனம் உள்ளவர்களுக்குத்தான் ஞாபகமறதி ஏற்படும். நினைவை உடனே உண்டாக்க மாத்திரைகள் கண்டு பிடித்திருக்கிறார்களாம், அதைச் சாப்பிட்டதும் ஞாபகசக்தி வந்துவிடுகிறதாம்.

திருமலை/மட்டுநகர் புதிய ஆயர்

# மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார்

நீடுவாழ்க!



நூலினிழை போல் மெலிந்த தேகம் அன்பை
நுவல்கின்ற மலர் விழிகள் கருணையுள்ளம்
பால்வழியும் தூயமுகம் பொன்சிரிப்பு
பணிவு நிறை நுட்பமதி இன்சொல் வாய்ந்து
காலமெலாம் இறைமகனுர் திராட்சைக் காவில்
கடினபணி புரிந்துவந்த ஞானச் செம்மல்
ஆலெனவே எமையணைத்து வாழ்ந் துயர்ந்த
ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை நீடு வாழ்க

## 'புதிய உலகம்' வெளியீட்டாளர்
# பேரருள்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார்
## திருமலை - மட்டுநகர் புதிய ஆயராஞர்

1977-ஆம் ஆண்டு தைப் பொங்கல் நாளன்று புதிய உலகம் சஞ்சிகையின் முதலாம் மலர் மலர்ந்தது.

உயிர்க்குலம் அனைத்தையும் ஒரே கண்கொண்டு பார்த்து, சமுதாயம் முழுவதும் வேற்றுமைகளை மறந்து உயர் நோக்குடன் வாழ வேண்டுமென்ற கருத்துடன், ஆன்ம நேய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கும் ஆவலுடன் 'புதிய உலகம்' ஆரம்பிக்கப்பட்டது. 'புதிய உலகம்' இதழ் ஆசிரியர் 'கரவையூர்ச் செல்வம்' அவர்கள் இலட்சியத்தை முதன் மலரில் தெளிவாகக் குறிப்பிட்டபோது,

'கட்சிகள், நாடுகள், மதங்கள், சாதிகள் நிலங்கள், நிறங்கள், பதவிகள், பொருள்கள் என்ற பிரிவினைகளுக்கு அப்பாற் சென்று இச் சஞ்சிகை தமிழ்ச் சமுதாயத்திற்குச் சேவை செய்யும். இப் பிரிவினைகளை வேரோடு அறுக்கவும் இச் சஞ்சிகை முன்னின்று உழைக்கும்' என்கிறார்.

இச் சஞ்சிகையின் மலர்வுக்குத் தோள் கொடுத்த அடிகளார் சிலருள் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் பணி மிகப் பெரிதெனக் கூறல் மிகையாகாது.

நிதி, நிருவாகம் வெளியீட்டுப் பணி என்பவற்றில் அன்று முதல் இன்றுவரை பொறுப்பாளராயிருந்து அவர் ஆற்றிய சேவை அளப்பரிது. அவர் தம் சேவைச் சிறப்பு இயல்புகளை ஈண்டு எடுத்துரைப்பதும் அரிதே.

இலாபத்தை எதிர் நோக்காது, இலட்சியப்பாதையிற் பீடு நடை போட்டதன் விளைவாகப் 'புதிய உலகம்' பொருளாதார வீழ்ச்சி கண்டது. அந்த நிலையிலும் மனந் தளராது, சஞ்சிகையானது உள்ளுறையும், கலையழகும் உயர் நோக்கும் குன்ரு வகையில் ஒளி மலராய்ப் பூப்பதற்கு உழைத்த பெருமை வெளியீட்டாளரையே சாரும்,

இனி, ஆயர் பதவியேற்ற ஆண்டகையவர்கள் தொடர்ந்து 'புதிய உலகம்' கடமை புரிய முடியாதென்பதை நாமறிவோம்.

எனவே, இத்தருணத்தில் 'புதிய உலகம்' தொடர்பாளர் அனைவர்களதும் சார்பில் எம் உள்ளங் கனிந்த நன்றியையும்

வாழ்த்துக்களையும் கூறி நிற்ப தோடு இறையருள் நிறைவொடு ஆயரவர்கள் புதிய திருப்பணி யிற் பொலிவுற வேண்டுமென வும் பிரார்த்திக்கின்றோம்.

மேலும் 'புதிய உலகம்' வள ரக் கடின பணி புரிவோர்க்கும் வெளியீட்டாளர் பதவியைக் கை யேற்றுக் கடனுற்றக் காத்திருப் பவர்க்கும் எம் வாழ்த்துக்களை கூறி நிற்கின்றோம்.

இறுதியாக பங்குனி–சித்திரை இதழ் எம் தந்தையின் சிறப்பு மலராய்ப் பரிமளிக்கச் செய்தி ருக்கலாமே' என்று வாசக நேயர் கள் பாச உணர்வுடன் வினுத் தொடுப்பது எம் செவிக்கெட் டாமலில்லை. இந்த இதழ் பூர்த் தியாகிக் கொண்டிருக்கும் வேளை யிலேயே 'மகிழ்ச்சிச் செய்தி' எமக்குக் கிடைத்ததென்பதையும் அறியத்தந்து சமாதானங் கூறு கின்றோம்.

# கருத்துமோதல் — போட்டி

**துறவிகள் அரசியலில் ஈடுபடலாம்.**
**— ஈடுபடக் கூடாது.**

இவற்றுக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் உங்கள் கருத் துக்களை எழுதி அனுப்புங்கள்.

**விதிகள்:**

★ தயவுகூர்ந்து தெளிவாகவும், ஒழுங்காகவும், சுருக்கமாக வும் இருபக்கங்களுக்கு மேற்படாமல் முழுத்தாளில் (18"×4") எழுதி அனுப்புங்கள்.

★ ஒருவரே சாதகமாகவும், பாதகமாகவும் வாதங்களை ஒருங்கிணைத்து எழுதக்கூடாது.

★ வைகாசித் திங்கள் இருபதாம் (20–5–83) நாளுக்கு முன் னர் உங்கள் படைப்புக்களை அனுப்பி வையுங்கள்.

★ சிறந்த வாதங்களுக்கு இரு சார்பிலும் பரிசுகள் உண்டு.

★ ஆக்கங்கள் அனைத்தும் வெளியீட்டாளரின் முகவரிக்கே அனுப்பப்படல் வேண்டும்.

# இலக்கிய ஏடுகள்

**பை**ந்தமிழ்த் தேனிக்கள் தருகின்ற செந்தமிழ்த்தேனை எப்படித்தான் இனிக்க இனிக்க இலக்கிய ஏடுகள் தந்தாலும், சில வெகுசனப் பத்திரிகைகள் கொடுக்கின்ற கசப்போடு கலந்த இனிப்பைத்தான் இன்றைய மக்கள் விரும்புகின்றார்கள்.

யதார்த்த வாழ்க்கையில் சில கற்பனைகளைக் கலந்து சுவைக்க விரும்புகின்றாரே அல்லாமல், கடந்த காலத்தின் பழைய சுவைகளைப் புதுப்பித்துப் பார்க்க அவர்கள் விரும்புவதில்லை. எளிய உரைநடையில் எடுத்துரைக்கும் வார்த்தை வாக்கியங்களைப் படித்துப் பார்க்க விரும்புகின்றாரே யல்லாமல், எதுகை மோனைகளை இணைத்துவைத்து வார்த்தெடுக்கும் அரிய உரைநடையைப் படித்துப்பார்க்க விரும்புவதில்லை. கற்பனை வாழ்க்கையில் உலவுகின்ற பொய்யான மனிதர்களோடு பழகுகின்றாரே யல்லாமல், நிச வாழ்க்கையில் காண்கின்ற மனிதர்களின் நிதர்சன உண்மைகளை எடுத்தெறிந்து விடுகின்றார்கள். தாழ்ந்த ரசனைக்குத் தீனி வேண்டுவதால், உயர்ந்த ரசனைகளை நாடு கடத்துகிறார்கள்.

இவ்வாறு விளக்குவதன் வாயிலாக, இலக்கிய ஏடுகள் பரவாமைக்கு முழுமைக் காரணமும் மக்களே என்பதல்ல. மக்களைக் காட்டிலும் இலக்கிய பத்திரிகைகளுக்குக் காரணங்கள் அதிகமுண்டு. அவற்றைப்பற்றி இங்கு விளக்கமாகக் காண்போம்.

இலக்கியம் என்பது தனியுடைமைச் சொத்தன்று. மக்கள் அனைவருக்கும் உரித்தான, முக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய பொதுவுடைமைப் பொழிலாகும். இதில் மூழ்கித் திளைப்போர் உயர்ந்த ரசனைகளை வைப்பாகக் கொண்டவர்கள் மட்டுமாக இருக்கக் கூடாது; சாதாரணப் பொது மக்களையும் சுவைக்கச் செய்கின்ற பாங்குடையதாக இருக்கவேண்டும். அப்போதுதான் இலக்கிய ஏடுகள் பொதுமக்களிடம் பரவ இயலும்.

பொதுமக்களைக் கவர்கின்ற எந்த அம்சமும் அந்த இலக்கிய ஏடுகளில் இல்லை என்பதும், பொதுமக்களுக்குப் பயன் தரக்கூடிய எந்தச்செய்தியையும் அந்த ஏடுகள் தொடவில்லை என்பதும் புலப்படும். மேலும் அவ்வேடுகள் தருகின்ற செய்திகள் புலவர் பெருமக்கட்கும், தமிழ் அறிஞர் கட்கும் மட்டுமே தேவையாவதால் தமிழ்மக்கட்கு அது தேவைப் படுவதில்லை.

இலக்கிய ஏடுகள் அனைத்துமே தமிழில் உள்ள சிலதுறைகளை

மட்டும் எடுத்துக்கொண்டு அதன் பொருட்டு வெளிவருவனவாக உள்ளன. சான்றாக ஆய்வுக் கட்டுரைகள் என்கின்றபோது தமிழ்ப் பொழில், செந்தமிழ்ச் செல்வியும், கவிதை எனும்போது கவியுகம், கவிதை போன்ற ஏடுகளும், கதைத் தொடர்களுக்குத் தீபம் போன்ற இதழ்களும் வெளியாகின்றன.

இப்போது பலதுறை இதழ்களுக்கே ஏற்பு அதிகம் மக்களிடம்......

மொழிநடை

அடுத்ததாக மொழிநடையைக் குறிப்பிடவேண்டும். இந்தநடை இலக்கிய நடையாக இருப்பதன்றி பத்திரிகை நடையாக இருப்பதில்லை. விரும்பிப் படித்து உய்த்துணரக்கூடிய செய்திகளைக் காட்டிலும், உற்றுநோக்கி நுண்ணிதின் உணர்ந்து கொள்ளக் கூடியனவே அதிகமுண்டு இலக்கிய இதழ்களில்.

அரிதான கருத்துக்களைச் செறிவான நடையில் தரும்போது அதனை எளிதான முறையில் புரிந்து கொள்வது மக்களால் இயலாது. அதுவுமின்றி பத்திரிகைத் துறை நுணுக்கங்கள் எதுவும் இலக்கிய ஏடுகள் பின்பற்றுவதில்லை.

எனவே இலக்கிய ஏடுகள் பரவ வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்..?

மொழிநடை மாற்றம் வேண்டும். சிந்தனை மிக்க கருத்துக்கள் சின்னஞ்சிறிய தொடர்கள்; அரிய பொருள்—அழகு சொற்கள் இவைதாம் தேவை!

எளிய சொல்லாட்சி—எல்லோர்க்கும் விளங்கும் அரசாட்சி இவைதான் தேவை! ஷேக்ஸ்பியரை செகப்பிரியராக மாற்றினால்... அந்த ஒருவரையே இருவராக எண்ணிக்கொள்ளும் மக்கள் இருக்கின்றார்கள் என்பதை மறத்தல் கூடாது.

---

த. சி. பாலு
இளங்கலை—தமிழ் இலக்,
இலயோலாக் கல்லூரி,
சென்னை—34.

---

புலமை எல்லையின் கருத்துக் கட்டுரைகள் இலக்கிய இதழ்களை நிரப்பினால் மக்கள் அதனைத் தொடார். எனவே, மக்களைக் கவர்கின்ற பகுதிகள் இருக்க வேண்டும்.

பழமையின் பாட்டையிலேயே செல்லாமல் — காலத்திற்கேற்ப புதுமையின் வீதியிலேயும் செல்ல வேண்டும்.

மரபுக் கவிதையிலேயே ஊன்றி நிற்காமல், புதுக்கவிதைகளையும் வெளியிட வேண்டும்.

ஆய்வுக் கட்டுரைகள் என்றிருந்தால் அவை இரண்டோ, மூன்றோ தரலாம்.

தரமற்ற சிறுகதைகளை வெகு சனப் பத்திரிகைகள் தருகிற தென்றால் அதற்கெதிராக தர மிக்க பொருள் பொதிந்த கதை களைப் பரப்பலாம்,

மற்றப் பத்திரிகைகள் பொழுது போக்குவனவாகத் தொடர்கதை களைத் தந்தால், பயனுள்ள சுவை மிக்க தொடர்கதைகளைத் தர வேண்டும் இலக்கிய இதழ்கள்.

திரைப்படங்களைப் பாமரத் தனத்தோடு வெகுசனப் பத்திரி கைகள் அணுகினால், இலக்கிய இதழ்கள் இலக்கியக் கண்ணோட் டத்தோடு அணுகலாம்.

இங்கே பின்பற்றப்படும் பாணி கள் ஒன்றாக இருப்பினும் கண் ணோட்டம் வேறு.

பாதை ஒன்று: ஆனால் பய ணம் வேறு!

'சுவைமிகுந்த பகுதிகள்; ஆனால் பொழுது போக்கு அம் சங்கள்' — இது வெகுசனப் பத் திரிகையின் நிலை.

'சுவை நல்கும் பக்கங்கள்; ஆனால் தமிழ் வளர்க்கும் முயற்சி கள்' - இஃது இலக்கிய ஏடுகளின் நிலையாக இருக்கவேண்டும்.

*

## சமூகத் தொடர்பு ஆண்டு — 1983

வாசக அன்பர்களுக்கு:

இக்காலகட்டத்தில் வாழும் ஈழத்து மக்களின் பிரச்சினை கள், அவர்களுடைய முறையான எதிர்பார்ப்புக்கள், அவர்க ளின் இன்றைய தேவைகள் போன்றவற்றையே அளவு கோலாக்கி, அதற்கேற்ப ஈழத்து நாளேடுகள், சஞ்சிகைகள், திங்களேடுகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், சிறு கதைகள், கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், நாவல் கள் உருவாக்கப் படுகின்றனவா? அன்றேல் இரண்டிற்கு மிடையே இடைவெளி உண்டா?

இவ்வினாக்களுக்கு விடையாக உங்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்களைத் தகுந்த ஆதாரத்துடன் எழுதி அனுப்புங்கள். தரங்கள் கண்டு பிரசுரிப்போம். ஆண்டு முடிவில் பரிசில்கள் வழங்குவோம்.

படிப்போம் — கேட்போம் — பார்ப்போம் — சிந்திப்போம்
விமர்சிப்போம் — வளர்வோம்.

## சென்ற இதழில் வெளியான

# குறுக்கெழுத்துப் போட்டியின்

## சரியான விடைகள்


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பு | 2 து | 3 மை | 4 ப் | 5 ப | 6 தி | 7 ல் |
| 8 தி | 9 ன் | 10 தி | | 11 கா | 12 ரு | 13 ணி |
| 14 ய | 15 ம | 16 லி | | 17 சு | 18 ம | 19 ஓ |
| 20 உ | 21 தி | 22 ஷ் | 23 டி | 24 ர | 25 ன் | 26 னி |
| 27 ல | | | | 28 ன் | 29 ற | 30 ம |
| 31 க | 32 ச் | 33 ச | 34 வ | 35 ட | 36 ம் | 37 ல |
| 38 ம் | | 39 யோ | 40 சு | 41 நா | 42 த | 43 ர் |

நலர் சரியானவிடைகள் அனுப்பியுள்ளனர்

பரிசுபெறும் பேறுளர்:

செல்வன் க. விஜரன்,
புனித வளனர் அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

# குறுக்கெழுத்துப் போட்டி




முடிவுதேதி 14-5-1983

மேலிருந்து கீழ்:

1. உத்தானம்.
2. உலகம் இச்சொல்லால் என்றும் மகிழாது.
3. இந்தப் 'புதிய உலகம்' சித்திரைப் — மலராக மலர்ந்துள்ளது.
6. திருதராட்டிரனுக்கு மனைவி.
7. கண்ணபிரானுக்கு ''அவல் முடிச்சு''த்தந்த நண்பர்.
9. கண்ணபிரானை இப்படியும் அழைப்பர்.
10. யேசுவின்மீது ஆவியானவர் — உருவில் இறங்கினார்.

இடமிருந்து வலம்:

1. அன்புடையோர்
4. 'பத்து' ஒன்று குறைந்திருக்கிறது.
5. 'நாற்படை' களுள் ஒன்று.
7. கன்னிப்பருவத்திற் கர்ணனைப் பெற்றவள்.
8. சிவந்த பசு.
9. வீட்டு மிருகங்களுள் ஒன்று.
10. சூரியன்.
11. 'இவர்களை என்னிடம் வரவிடுங்கள்' என்றார் இறைமகன்.
12. —— இலார் எல்லாம் தமக்குரியர்.

# சிறுவர் உலகு

அன்புச் சிறுவர் சிறுமியர்களே,

உங்கள் பாலவயதிலே மனம் பால்போலச் சுத்தமாயிருக்கும் தெளிவாயிருக்கும். எதையும் பாடமாக்கலாம், பாடமாக்குவதற்குப் பெரிய முயற்சியும் தேவையில்லை.

ஔவைக் கிழவி கூறுவதுபோலக் 'கல்விமனப்பழக்கம்' அல்லவா? ஆகவே, நீங்கள் இன்பமாகவும், எளிதாகவும் படிக்கவும், பாடமாக்கவும், பொழுதுபோக்கவும், சிந்திக்கவும், அறிவு பெறவும் சின்னச் சின்ன விடுகதைகள் - நொடிகள் விருப்பமாயிருக்கும்.

உங்கள் வீட்டிலே உங்கள் அப்பா, அம்மா, பாட்டி, பாட்டன்மார்கள் நல்ல சுவையான விடுகதைகளைக் கூறியிருப்பார்கள். நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவைகளைப் போலச் சிறிய விடுகதைகள் இங்கே இருக்கின்றன. அவற்றைப் படித்து விடைகளைக் கூற முயன்று பாருங்கள்.

முடியாவிட்டால் வேறொருபக்கத்தில் விடைகள் உண்டு. தேடிப்பிடியுங்கள்.

இயற்கைக் கல்வியின் அடையாளங்களான இவ்விடுகதைகளில் நமது முன்னோரின், கலை, பழக்கவழக்கங்கள், தொழில், வாழ்க்கை அமைப்பு, மனப்போக்குகள், கையாளும் பொருள்கள் முதலியன அமைந்துள்ளன.

பாட்டுச் சுவையையும், அழகையும் இனிமையான ஓசையையும் கூட இவற்றின் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இயற்கைக் கல்வி வளர்ச்சிக்கும், தமிழறிவுக்கும் இவை பயன்படும்.

உங்களுக்குத் தெரிந்த விடுகதைகளையும் விடைகளையும் எழுதி அனுப்புங்கள். மிகச் சிறந்தவற்றைப் புதியஉலகத்திற் பிரசுரிப்போம்.

# விடுகதைகள்

1. கட்டாமல் கறக்காமல் காடேறி மேயாமல்
நின்ற இடத்தில் ஒரு வள்ளம் பால்

2. நூலுக்கு வழிக் கருவி
மாதருக்குத் தொழிற்கருவி

3. மாமன் வீட்டுத் தோட்டத்தில்
மஞ்சள் குருவி ஊசலாடுகிறது

4. சிறு சிறு கதவுகள் செய்யாத கதவுகள்
திறக்க அடைக்கச் சத்தம் செய்யாத கதவுகள்

5. மலையிலிருந்து ஒருகுண்டு உருட்டினேன் தம்பி
மடியில் வந்து விழுந்தது என்ன தம்பி

6. கால் கறுப்பு முக்கால் சிவப்பு
உடைத்தால் பருப்பு தின்றால் துவர்ப்பு

7. காயும் கோணல் கொள்ளடா மைத்துனு
கதையும் விடுத்தேன் சொல்லடா மைத்துனு

8. ஓட்டமாய் ஓடும் உருண்டுருண்டு ஓடும்
பள்ளத்தைக் கண்டால் பாய்ந்து பாய்ந்து ஓடும்

9. விடிய விடியப் பூந்தோட்டம்
விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம்

10. முதுகிலே மூட்டை சுமந்து
மூன்று மணிக்கு முழம்போவான்

---

★ குடித்துவிட்டு கார் ஓட்டுவதால் ஏற்பட்ட விபத்துக்களில் 1981-ம் ஆண்டு இறந்த அமெரிக்கர்களின் எண்ணிக்கை 25,000 இதில் 35% பேர்கள் 16 வயது முதல் 24 வயதுவரை உள்ளவர்கள்.

★ அணிசேரா நாடுகள் இயக்கத்தின் முதலாவது பெண்தலைவியான திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா, இன்று குடியுரிமையே இன்றி இருக்கிறரே! காலத்தின் கோலத்தை எப்படியென்பது ?

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்

அன்பின் புதிய உலக வாசக அன்பர்கள் அனைவருக்கும் எனது அன்புகலந்த வணக்கம்.

சென்ற இதழில் இப்பகுதியை எழுத முடியாமைக்கு மனம் வருந்துகிறேன்.

எப்பொழுதுமே 'எண்ண' முடிகிறது. ஆனால், அதை அப்படியே எழுத்தில் வடிக்க சூழல் இல்லாமல் போவது இன்றைய பத்திரிகைச் சுதந்திரத்தின் நிலையென எண்ணி வேதனைப்படத்தான் முடிகிறது.

தடுப்புக் காவலில் இருக்கும் எமது அன்புக் குருமாரையிட்டு, வைத்தியக் கலாநிதியையிட்டு, ஆசிரியப் பெருமக்களையிட்டு நிறைய எண்ணுகிறோம். ஆனால், அவர்களுடைய வழக்கு நீதி மன்றத்தில் உள்ளது. பொறுத்திருப்போம்; வழக்கு முடிய எழுதுவோம்.

**அணிசேரா மாநாடு :**

இக்கட்டுரையை எழுதும் பொழுது இந்தியாவின் தலைநகரான புது டெல்லியில் மிகக் கோலாகலமாக அணிசேரா நாடுகளின் மாநாடு ஏழாவது முறையாக நடைபெறுகின்றது. அதையிட்டுப் பலவாறாக எண்ணினோம்; ஆகவே, பகிர்வோமென முனைந்தோம்.

1961-ம் ஆண்டு பெல்கிறேட்டில் 25 நாடுகளின் பிரதிநிதித்துவத்துடன் துவங்கிய அணிசேரா இயக்கம், இன்று தனது 22-வது வயதில் 101 நாடுகளின் பிரதிநிதித்துவத்துடன் வளர்ந்துள்ளது அதாவது உலக நாடுகளின் மூன்றில் இரண்டு பகுதி இவ்வியக்கத்தில் உள்ளது. 21 வயது ஒரு மனித வாழ்க்கையில் முக்கியமான ஒரு கட்டமாகவே கருதவேண்டும். கடமையுணர்ச்சியும், பொறுப்புணர்ச்சியும் வரவேண்டிய வயது, அது.

இருக்கில் நடைபெற இருந்த இம்மாநாடு, இருக் போர்க் கோலம் பூண்டிருப்பதால், இந்தியாவுக்கு இறுதிநேரத்தில் (நான்கு மாத அவகாசத்தில்) மாற்றப்பட்டது. இருப்பினும் அதிசயிக்கத்தக்க முறையில் இந்தியா இம்மாநாட்டிற்கு ஆயத்தம் செய்துள்ளது. ஒன்பதாவது ஆசிய விளையாட்டைப் புது டில்லியில் வெற்றிகரமாக நடத்திய இந்திராவின் அரசாங்கம், இச்சந்தர்ப்பத்தையும் மனமுவந்து வரவேற்றுள்

ளது. குறைந்துவரும் ஆதரவைக் கூட்டவேண்டுமென விரும்பும் இந்திராகாந்தி, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை நன்கே பயன் படுத்துவதில் கெட்டிக்காரிதான்.

101 நாடுகளின் பிரதிநிதிகள், 18 நாடுகளின் பார்வையாளர்கள், 24 நாடுகளின் அழைக்கப்பட்ட விருந்தினர்கள் இம்மாநாட்டில் பங்குகொள்ளுகிறார்கள். அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில் இருந்து, 15 துவக்கி 150-க்கும் மேற்பட்டவர்கள் பிரதிநிதிகளாக வந்துள்ளார்கள். கிட்டத்தட்ட 4,000 பிரதிநிதிகளுடன் 1,500 பத்திரிகையாளர்களும் (பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்சி, திரைப்படத் துறைகள் உட்பட) வந்துள்ளார்கள்.

## பெரிய நாடுகளின் சின்னத் தனம் :

இருனும் இருக்கும் ஒரு ஹொட்டலில் தங்குவதானல், யாருக்கு எந்த மாடியில் எந்த அறை கொடுப்பதென்பது அணிசேரா நாடுகளின் பிரச்சினைகளில் ஒன்று. பொதுவாக அகர வரிசைப்படி இடங்கள் ஒதுக்கப்பட்ட பொழுதிலும், இருனும் இருக்கும் வெவ்வேறு ஹொட்டல்களில் தங்குவதற்கு வாய்ப்புச் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பல கோடி ரூபாய்களை (500 கோடி US டொலர்கள் என்று ஒரு மதிப்பீடு) இம்மாநாட்டை இருக்கில் நடத்துவதற்காகச் செலவுசெய்துவிட்ட இருக், அடுத்த மாநாட்டையாவது இருக்கில் நடத்த முயற்சிகள் எடுக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது ஆனல், புது டெல்லியில் பல இருனியர்கள் இருக்கிறார்களென்று கூறி, பாதுகாப்பு என்ற காரணம் காட்டி, இருக்கின் ஜனதிபதி மாநாட்டிற்கு வரவில்லை! அணிசேரா மாநாடு இருக்-இருன் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்குமா? ... தீர்க்க முடியுமா? பெரிய பிரச்சினைகளைத் தீர்க்கக் கோடிக்கணக்கான பணச்செலவில் ஒன்றுகூடும் அணிசேரா நாடுகள் கூடும் வேளையிலேயே சில்லறைப் பிரச்சினைகளை உருவாக்கி விடுகிறார்கள் என்பதற்கு இதுவுமோர் சான்று.

சில பின்தங்கிய நாடுகளில் இருந்து வந்த ஜனதிபதிகள், பிரதம மந்திரிகள் தங்களுடைய தனிப்பட்ட விமானங்களிலேயே வந்தார்கள். அந்த நாடுகள் இச் செலவைப் பொறுக்க முடியுமா ? என்பது சிந்தனைக்குரிய கேள்வி. இதைத் தான் விரும்பவில்லையென்று கூறி, பொது விமானத்தில் பயணஞ்செய்து பொம்பேயில்தங்கி புதுடில்லி சென்ற ஈழத்து ஜனதிபதியைப் பாராட்டத் தான் வேண்டும்.

## அணிசேரா ஆடம்பரம் :

மூன்ருவது உலக நாடுகளில் இருந்துவந்த ஜனதிபதிகளுக்கும், பிரதம மந்திரிகளுக்கும், அரசர்

களுக்கும் மேற்கத்திய நாட்டுப் பாணியிலேயே பெரும் செலவில் வரவேற்பும், தங்கும் / போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்க பட வேண்டுமா? புதுடில்லியில் உள்ள ஐந்து நட்சத்திர ஹொட்டல்கள் அனைத்தும் (ராஜ், அசோக், ஒபெரொய். செறற்ரன்) ஒரே வசதிகளைக் கொண்டவையல்ல என்ற சிலரின் குறைகூறுதலினால், அசோக்கா ஹொட்டலின் 300 அறைகள் நாலுகோடி ரூபா செலவிலும், ஒபெரொய் ஹொட்டலில் 14 கோடி ரூபாய் செலவிலும் அறைகள் புதுப்பிக்கப்பட்டன. பேல்நாட்டில் இருந்து உட்புற ஒப்பனையாளர் ஒருவர் இதற்கென வருவிக்கப் பட்டார். குளியலறைத் தளவாடங்கள் கூட மேல் நாடுகளில் இருந்து வருவிக்கப்பட்டன. பயணஞ் செய்வதற்கு மேர்சிடீஸ் பென்ஸ் கார்கள் (துப்பாக்கிக் குண்டுகள் துளைத்துச் செல்ல முடியாத அமைப்புடன்) ஒவ்வொரு நாட்டுத் தலைவருக்கும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டிற்கும் ஐந்து அம்பாசடர் கார்களும் ஒதுக்கப்பட்டுள்ளது.

“இந்தியனாக வாழ்; இந்திய பொருட்களையே வாங்கு” என்ற இந்தியாவின் விருது வாக்கு மீண்டும் உயர் மட்டத்திலேயே மீறப் பட்டுள்ளது.

புதுடில்லியின் பாலம் விமான நிலையம் பிரமாண்டமான அளவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. வரும் தலைவர்களை வரவேற்க இரு நாட்களாக இந்திய ஜனாதிபதியும், உப-ஜனாதிபதியும், பிரதமரும் விமான நிலையத்திலேயே “குடி” புகுந்து விட்டார்கள்! அனைத்தும் நிமிடத்துக்கு நிமிடமாக ஒழுங்குசெய்யப் பட்டிருந்தன. ஒவ்வொரு தலைவரையும் வரவேற்க இந்திரகாந்தி விமான வரவேற்பறையில் இருந்து எத்தனை காலடிகள் எடுத்துவைக்க வேண்டுமென கணக்கிட்டு வைத்துள்ளார்களென்றால் பாருங்களேன் அணிசேரா மாநாட்டின் முக்கியத்துவத்தை!!

சில தலைவர்களைக் கொலைச் சதிகள் உண்டு என்று அறிவிக்கப் பட்டமையினால் (குறிப்பாகக் கியூபா, சிரியா, எஜிப்து, இரான், இராக், அவ்கனிஸ்ரான், ரோர்க்கி) அனைத்துத் தலைவர்களுக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு ஹொட்டலிலும், இருபது அறைகள் பாதுகாப்பு அதிகாரிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. உணவைப் பரிசோதிக்க நிபுணர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். இத்தனையையும் மீறி ஏதாவது ஏற்பட்டுவிட்டாலும் என்று எண்ணி, வெலிங்டன் மருத்துவ மனையில் துப்பாக்கிக் குண்டு நுழைய முடியாத அமைப்புடன் பன்னிரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புக்கென ஆயுதம் தாங்கிய 5,000 போர்வீரர்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளனர். இதைவிட ஒவ்

வொரு தலைவரும் தனது சொந்தப் பாதுகாப்பாளர்களையும் கொண்டுவந்துள்ளார்கள்.

நான்கு முக்கிய மொழிகளில் பேச்சுகள், உரையாடல்கள் நடைபெறும். தேசியம் பேசும் இந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டு மொழிகள்— ஆங்கிலம், ஸ்பனிஸ், பிரென்சு, அரபிக். வேறு வழியில்லையே! இன்றைய உலகில் முதல் மூன்றும் அதுவும் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முதல் இரண்டு மொழிகளாவது முக்கியம் வாய்ந்தவை என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. தென் அமெரிக்க நாடுகளை எடுத்துக்கொண்டால் ஸ்பனிஸ் முக்கிய மொழியாகி விடுகின்றது.

## அணிசேரா நாடுகளின் பரிசேயத் தனம் :

அணிசேரா நாடுகளின் அணிசேரும் அழகையும் சற்றுப் பார்ப்பது நல்லது. கிட்டத்தட்ட ஐம்பது நாடுகள் வட அமெரிக்காவின் பக்கம் சாய்கின்றன. பொருளாதாரத்திற்கும், ஆயுத உதவிக்கும் இந்நாடுகள் வலதுசாரி வல்லரசை ஆதரிக்கின்றன. இருபத்தொரு நாடுகள் ரஷ்ஷியாவை ஆதரிக்கின்றன. அதுவும் இதுவரை அணிசேரா நாடுகளின் முதல்வராகக் கடமையாற்றிய கியூபாவின் வி(f)டெல் கஸ்ரோ முழுக்க முழுக்க ரஷ்ஷியாவை ஆதரித்தது மட்டுமன்றி, அணிசேரா இயக்கத்தையே அப்பக்கம் சாய்க்க முனைந்தார் என்ற குற்றச்சாட்டை அவ்வப்பொழுது பல நாடுகள் சுட்டிக்காட்டின.

அணிசேரா நாடுகளுள் இருபத்தாறு நாடுகள் திட்டவட்டமாக சர்வாதிகார ஆட்சியை அன்றேல் இராணுவ ஆட்சியைக் கொண்டுள்ளன. அனைத்துலக அரசியல் மன்னிப்புக் குழுவின் மதிப்பின்படி இவ்வணியைச் சேர்ந்த நாடுகளுள், 72 நாடுகளில் மனித உரிமைகள் திட்டவட்டமாக மீறப்படுகின்றன என்றும் அறிகின்றோம்.

அவ்கனிஸ்ரானில் இருந்து ரஷ்ஷியாவின் இராணுவம் வெளியேற வேண்டுமென்று உறுதியான முடிவை இம்மாநாடு எடுக்குமா? கம்புச்சியாவை வியட்நாம் ஊடுருவியது தவறு என்றுகூறி, கம்புச்சியாவின் பிரதிநிதித்துவத்தை நிறுவுமா, இம்மாநாடு? மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சினைகளுக்கு ஏதாவது ஒரு நல்ல சுமுகமான தீர்வைக் காணுமா, இம்மாநாடு? இந்துமா சமுத்திரத்தில் இருந்து வல்லரசுகளின் அத்துமீறல்களை அடியோடு களையுமா, இம்மாநாடு? எல்சல்வடோரில் வட அமெரிக்காவின் ஈடுபாடுகளை எதிர்க்குமா, இம்மாநாடு?

ஒவ்வொரு அணிசேரா நாட்டின் சிறுபான்மையினரின் பிரச்சினைகளை நீதியான முறையில் தீர்க்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருமா,

இம்மாநாடு ? அந்தந்த நாட்டின் மனித உரிமைகள் மீறப்படும் நிலையை ஆராய்ந்து, அவ்வுரிமைகள் காப்பாற்றப்பட ஆவன செய்ய அணிசேரா நாடுகளின் மத்தியக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அக்குழு செயலாற்ற உரிமையும் கொடுக்க வழிசமைக்குமா, இம் மாநாடு ?

தங்கள் தங்கள் நாடுகளில் மனித உரிமைகளைப் பறித்து, சர்வாதிகாரங்களை ஏற்படுத்தி, இராணுவ ஆட்சியை நடைமுறைப் படுத்தி, இதற்கு உதவியாக பயங்கர ஆயுதங்களை மேல்நாடுகளில் இருந்து வருவிக்கும் இந்த நாடுகளுக்கு என்ன அருகதை உண்டு, மேல் நாடுகள் ஆயுத உற்பத்தியைக் குறைக்க வேண்டுமென்று கேட்பதற்கு ? தங்கள் நாடுகளில் சிறுபான்மையினரை இராணுவ — பொலிஸ் உதவியுடன் அடக்கி ஒடுக்கும் இந்தநாடுகளுக்கு என்ன உரிமையுண்டு உலக சமாதானத்தைப்பற்றிப் பேசுவதற்கு ?

பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடும் ஆயாவின் நிலையில்தான் இன்று அணிசேரா நாடுகள் இருக்கின்றன. உலகின் வல்லரசுகளுக்குப்போர்க் களம் கொடுத்துவிட்டு, அணிசேரா நாடுகள் என்று கைகோத்து நிற்கும் பரிசேயத்தனத்துக்கு இவ்வளவு செலவில் உச்சி மாநாடு தேவையா ? வளரும் நாடுகளின் பொருளாதாரம் பற்றிப் பேசுவதற்கு இம்மாநாட்டில் முதலிடம் கொடுக்க வேண்டுமென்று விரும்பும் இவ்வியக்கத்தினர், இம்மாநாட்டிற்கு எவ்வளவு செலவு செய்துள்ளார்கள் ? இவ்வளவு ஆடம்பரம் தேவையா ?— என்று முதலில் சிந்திப்பார்களா ?

## ஈழத்து ஜனாதிபதியின் துணிவான கருத்து :

இந்நேரத்தில், இம்மாநாட்டிற்குச் செல்லும் வழியில், பொம்பே ஓபெறொய் ஹொட்டலில் தங்கிய பொழுது ஈழத்து ஜனாதிபதி அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபருக்கு அளித்த பேட்டியில் சொல்லிய சில கருத்துக்களை இங்கு குறிப்பிடவேண்டும்.

அவ்கனிஸ்ரானில் இருந்து றஷ்ஷியா வெளியேற வேண்டும் என்றும், கம்புச்சியாவில் ஐ. நா. வின் மேற்பார்வையில் சுதந்திரமான ஒரு தேர்தல் நடைபெற வேண்டுமென்றும், இப்பொழுது அங்குள்ள அரசாங்கம் மக்கள் மேல் திணிக்கப் பட்டுள்ளதாகவும், அதைத் தான் எதிர்ப்பதாகவும் ஜனாதிபதி உறுதியுடன் கூறியுள்ளார். ''வன்மையாகத் திணிக்கப்படும் ஆட்சி முறையை நாம் எதிர்க்கிறோம்'' என்று ஜனாதிபதி ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளார். ஜனாதிபதியின் கூற்றை முழுமையாகப் பாராட்டி வரவேற்கின்றேன். அதேவேளை அக்

கூற்றையே கொள்கையாக்கி ஈழ நாட்டிலும் அதை நடைமுறைப் படுத்துவாராஞல், ஈழநாட்டின் பிரச்சினைகள் சில தாமாகவே தீருமே !

பெல்கிறேட்டில் முதலாவது அணிசேரா மாநாடு முடிவடைந்து தீர்மானங்களை எட்டுப்பக்க அள வில் அறிக்கையாக்கிஞர்கள். மூன் றரை ஆண்டுகளுக்கு முன்னர் கவான்ஞவின் மாநாட்டுத் தீர் மானங்கள் 96 பக்கங்களாக நீண் டன. இது ஒரு வளர்ச்சியா ?

வார்த்தைகள், வார்த்தைகள், வார்த்தைகள், வாதங்கள், விவா தங்கள், விதண்டா வாதங்கள் என்று மாநாடுகளும், ஆய்வரங்கு களும் நடைபெறுகின்றனவே யொழிய, நடைமுறையில் எதை யுமே காணேமே !

இத்தலைவர்களின் மனங்கள் மாறவேண்டும் ; நோக்கங்கள் தூய்மையாக வேண்டும் ; இலட் சியங்கள் தெளிவாக வேண்டும். தீர்மானங்களை நடைமுறைப்படுத் த உறுதி வேண்டும் ; அதற்குரி யனவற்றை உருவாக்கவேண்டும்; அன்றேல், ஏழைகளின் பணத்தை ஏப்பமிட இவர்களுக்கு உரிமை யில்லை என்று மக்கள் குரல் கொடுக்க வேண்டும் ; அந்தப் பத் திரிகைச் சுதந்திரத்தையாவது இவர்கள் மக்களுக்கு அளிக்க வேண்டும்.

இச்சிந்தனைகளில் உங்களையும் சிந்திக்கவிட்டு, மறுமுறை சிந்தனை யுடன் உங்களைச் சந்திக்குமட்டும் அன்பு வணக்கங்கூறி விடை பெறு வது —

உங்கள் அன்புச் சகோதரன்,

கரவையூர்ச் செல்வம்

★

## விடுகதை விடைகள்

1. இளநீர் 2. தையல் ஊசி
3. எலுமிச்சம் பழம்
4. இமைகள் 5. கண்ணீர்
6. குன்றிமணி
7. சொள்ளுக்காய்
8. தண்ணீர்
9. நட்சத்திரம் 10. நத்தை

அணிசேராமை என்பது விலகிநிற்கும் ஒரு தெளிவற் ற நிலையோ, அன்றேல் அக் கறையின்மையோ அல்ல ; ஒரு சில கொள்கைகளில் சுதந்திரமான செயற்திறன கொண்ட முடிவுகள் எடுக் கக்கூடிய ஈடுபாடு கொண் டது. சமாதானம் என்பது செயலின்மையன்று.

— இந்திராகாந்தி

# எந்நாளோ?

நல்லதொரு சமுதாயம் நாம் கண்டு எந்நாளும்
எல்லையிலாப் பேரின்பம் எய்துவது எந்நாளோ?

போட்டி பகை பிரிவினைகள் பொங்கிவரும் ஆழக்காறு
வாட்டுகின்ற சாதித் தீ வாழ்வணைதல் எந்நாளோ?

இல்லை எனக் கை நீட்டி இரந்தலையும் ஒரு கூட்டம்
இல்லையென இறும்பூது எற்படும் நாள் எந்நாளோ?

கண்மூடிப் புரிகின்ற காரியங்கள் சிதறுண்டு
மண்மூடி அழிந்ததெனை மகிழும் நாள் எந்நாளோ?

அறமோங்கும் இறைவனருள் அரசாட்சி வந்ததென
மறமோடி மறைந்திங்கு மடிகின்ற தெந்நாளோ?

அன்பென்னும் தண்கடலில் அலை துள்ளிப் பாய்ந்துவர
இன்பப்பொற் படகில் நாம் ஏறுவதும் எந்நாளோ?

நறுமலர்கள் பூத்தொளிர ஞானத்தின் ஆவிமழை
இறைமக்கள் எம் வாழ்வில் இறங்குவதும் எந்நாளோ?

புதுவாழ்வு என்றுரைத்துத் தன்னலமே போற்றுது
பொதுவாழ்வுத் தூதுரைக்கும் புண்ணியநாள்
எந்நாளோ?

உலகிற்கு நற்செய்தி உணர்வூட்டும் பெருந்தாகம்
இலகும்நற் றொண்டர்குழாம் எழும் நாளும் எந்நாளோ?

"பொதுநலத்தூதன்"

---

**சமாதானம், ஆயுதக் குறைப்பு, வளர்ச்சி போன்றவையே அணிசேரா நாடுகள் இயக்கத்தின் நோக்கமாகும்.**

---

# புதுமைப் பதில்

திருமதி S. பொன்ரோஸ்
நாரந்தனை.

அன்பு இன்று யாரிடம் இருக்கிறது.

புத்தகங்களில் இருக்கிறது, பேச்சுக்களில் நடமாடுகிறது, மிருகங்கள் பறவைகளிடமும் இருக்கிறது.

மங்களராஜா—புங்குடுதீவு

கள்ள நோட்டு அதிகம் பெருகிவிட்டதாமே அதை எப்படிக் கண்டு பிடிக்கலாம்?

நோட்டுத் தந்தவரின் முகத்தை நன்ருக உற்றுப்பாருங்கள். விழிக்கிற விழியில் தெரியும் ''அகத்தின் அழகு''.

இ. கிதபொன்கலன்—சாவகச்சேரி

இப்போது அடிக்கடி துப்பாக்கிச் சூடு நடக்கிறதே. இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

வெல்ல முடியாதவர்களைக் கொல்லுவதைத்தவிர வேறு வழி அவர்களுக்குத் தெரியாதென்று நினைக்கிறேன்.

செல்வி அன்னபூரணம்
உருத்திரபுரம்

நான் எப்போதும் சிரித்த முகத்துடன் இருக்க விரும்புகிறேன் என்ன செய்யலாம்?

சிரித்த முகத்தோடு ஒரு போட்டோவை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

இ. குணசீலன்—தாழையடி.

நற்செய்திப்பணி பிறருடைய சமயச் சுதந்திரத்தில் ஈடுபடும் அநாகரிகச் செயல் என்று கிறிஸ்தவர்களும் கூறுகிருர்கள் இது சரியா?

பிழை. கிறிஸ்துவினிடத்திற் கிடைக்கிற அன்பின் பெருமையை அறியாதவர்களே அப்படிக் கூறுவார்கள். ஒருவன் தன் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள அவனுக்கு உதவுவது அநாகரிகமாகுமா.

திருமதி பா. ஜசிந்தா- செட்டிகுளம்

கோயில்கள் கட்டுவதால் பயன் இல்லை என்று சிலர் முணுமுணுக்கிருர்களே. அவர்களுக்கு என்ன கூறுவீர்கள்?

கோயில் இல்லாத ஊரிற் குடியிருக்கக் கூடாது என்பது தமிழர் முதுமொழி. ஆனல் மனித சமூகம் கண்ணெதிரே சுருண்டு கொண்டிருக்க அதைப்பாராது ஒதுங்கிச் சென்று கோயில் கட்டுவது பயனற்றது.

# உங்கள் பார்வை

அரங்க முருகையன் இலண்டன்

புதிய உலகம்—மலர் 36 (சன/பெப்ரு. 83) கிடைத்தது.

எமது பார்வை--தமிழ் மக்கள் ஒன்றுபட நீங்கள் தரும் அறிவுரையை ஏற்றுத் தமிழர் திருந்துவாரா? திரு. தாவீது (டேவிட்) படைத்த 'தெளிவு' உருவகக் கதை நன்றாயமைந்திருந்தது.

திரு அன்ரன் எழுதிய 'அவனுக்குக் கவிதை பொய்த்து விட்டது' நல்ல படைப்பு. மணிக் கதையும் பாரட்டுக்குரியது உங்கள் வீட்டிலும் இப்படியா? சுருக்கமானதாகவும் சிந்தனையைக் கிளறுவதாகவும் இருந்தது.

சிறப்பான பாராட்டுக்குரியது நாவண்ணன் ஆக்கிய 'ஓர் ஏனம் (பேணி) புலம்புகிறது' என்ற வசன கவிதை. உலகமே அவனுடையது, பிச்சைக்காரனை அவன் உலகிற்கு திறை பெறும் மன்னர் மன்னன்! துறவிக்கு வேந்தனும் துரும்பு. இவனுக்கோ துறவியும் துரும்பு! அவன் (சூழ்நிலையால்) ஞானி. நாயோடு கூட சமபந்தி இருந்தவன் (பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் — குறள்) சிலேடை நயம் நெடுகிலும் இழையோடச் சிறப்பாயமைந்துள்ளது.

நிலாதமிழ்தாசன் நிலாவெளி

ஏழாவதாண்டில் எழுச்சியுடன் எடுத்தடிவைக்கும் புத்தாண்டுப் புதியஉலகம் கண்டு பூரிப்படைந்தேன்.

வழமையைவிட இம்முறை புதியஉலகில் புதுப்பொலிவினைத் தரிசிக்க முடிந்தது. மேலும் பொலிவு பெற என் வாழ்த்துக்கள். கவிதையென்ற பெயரில் எதையோவெல்லாம் எழுதத்தொடங்கிவிட்ட நேரத்தில் தரமான சில கவிதைகளைக் காணமுடிந்ததில் மகிழ்ச்சிகரமான ஒரு வசன கவிதையை இதுதான் வசனக்கவிதையெனத்தந்த நாவண்ணனின் ஒரு பேணியின் புலம்பலில்! மானிடத்தின் ஓலம் தொனிக்கிறது! அவருக்கு எனது பாராட்டுக்கள்.

பற்றிமாறேஸ், முல்லைத்தீவு.

புதிய ஆண்டின் முதல் சஞ்சிகையில் இடம்பெற்ற அத்தனை அம்சமும் தரமானவை. குறிப்பாக 'எமது பார்வை' 'தூக்கு மரங்கள் துச்சமான கதை' 'ஒரு பேணி புலம்புகிறது' 'அவனுக்கு கவிதை பொய்த்துவிட்டது' என்பவை என் மனதைக் கொள்ளை கொண்டன.

கரவையூர்ச் செல்வம் அண்ணாவின் 'எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்' பகுதி இம் முறை

இடம் பெருதது கவலைதான். நான் மிகவும் ஆவலோடு சஞ்சிகையைப் புரட்டியபோது எலக்கு கிடைத்தது ஏமாற்றந்தான். இனியும் இதுபோல் அமையாது இப்பகுதியைத் தொடர்ந்து சஞ்சிகையில் சேர்த்துக் கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

ஆ. நிர்மலா மாரீசன்கூடல்

'அவனுக்கு கவிதை பொய்த்து விட்டது' சிறுகதை மூலம் கன்னுட்டி அன்ரன் அவர்கள் ஸ்ரீ லங்காவில் தொழில் புரியும் தமிழரின் மனநிலையுடன் பதவிக்காகவும் பட்டத்திற்காகவும் புகழுக்காகவும் பணத்தை விரயம் செய்யும் தமிழரின் நிலையையும் அப்பட்டமாக்கியது மன்றி அவர்களுக்கு ஒரு சவாலும் விடுத்துள்ளார் போல் தோன்றுகிறது. உண்மை மனிதனை மதிக்கத் தெரியாதவர்கட்கு நாவண்ணன் அண்ணுவின் ஒரு பேணி புலம்புகிறது கவிதை பலே ஜோர். கரவையூர் அண்ணு தூக்கிவிட்டாரா?

K. காளிமுத்து, கோவுஸ்ஸ, எல்ல

புதிய உலகம் மேன் மேலும் புதுப் பொலிவுடன் மலர வேண்டும் என வாழ்த்துகிறேன். ஏக்கத்துடன் போய்விட்டாள் என்ற சிறுகதை எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

மா. பவுலின்ராஜ் புதுக்குடியிருப்பு

புதுமைதனைப் படைத்திடும் புது உலகே, உன் படைப்பு யாவும் இனிதே இருப்பினும், ஒரு குறை நிறைவு செய்திடு. எம்மவர் (சிறுவர்) படைப்புக்களைக் கடைக்கண் பார்த்து- எம் கலையார்வமதை வளர்த்திட உதவிடு! எமக்கெனப் பிறக்கும் நீ எம் கருத்தை ஏற்றுச் செயல்படு. உன் சேவை நீடிக்கட்டும்.

அருள். வளன்புரம்.

எமது பார்வையில் தமிழினத்தின் நிலைமையைச் சிந்திக்க வைத்து அவனுடைய பிரச்சினைகள் தீர்வதற்குப் பெருந்தடையாயிருப்பவை தமிழனின் பல வேறு வகைப்பட்ட பிரிவினைகளேயென்பதை ஆசிரியர் சரியாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

'உங்கள் வீட்டிலும் இப்படியா' முடிவில் உங்கள் வீட்டில் எப்படி? என்றொரு வினு. நமது விடை வீட்டுக்கு வீடு வாசற்படி தான் என்பது.

டே. வின்சிலோ மார்க் வங்காலை

ஜனவரி - பெப்ரவரி புதிய உலகம் படித்தேன். ஒவ்வொரு அம்சமும் புதுப் பொலிவுடன் மிளிர்கின்றது. புதிய உலகம் சிறந்து ஓங்க எனது நல்லாசிகள்.

## சந்தாதாரர் கவனத்துக்கு

- உங்களது ஆண்டுச் சந்தாப் பணத்தைப் புதுப்பியுங்கள்
- சந்தாப் பணத்தை வெளியீட்டாளர், புதிய உலகம், அ. பெ. எண் 2, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
- உங்கள் முகவரியில் மாற்றம் ஏற்பட்டால் புதிய முகவரியை எமக்கு அனுப்பிவையுங்கள்.
- எங்களோடு தொடர்பு கொள்ளும்பொழுது உங்கள் சந்தா இலக்கத்தைக் குறிப்பிடத் தவறாதீர்கள்.
- **மணியோடர் மூலம் பணத்தை அனுப்புவோர் தயவு செய்து உங்கள் பெயரையும், விலாசத்தையும் எமக்குத் தெரிவிக்க மறக்கவேண்டாம்.**
- புதிய உலகம் தனிப்பிரதியின் விலை ரூபாய் 2–50.
- ஆண்டுச் சந்தா ரூபாய் 15–00 என்பதை நினைவில் வைத்திருங்கள்.

— **வெளியீட்டாளர்**